Registered as a Newspaper    பக்கங்கள் 10    விலை ரூபா 6.00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
சுண்டிக்குளி கிளை நூலகம்.

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2025    தை 08    (21-01-1994)    வெள்ளிக்கிழமை    ஓசை 337

## 400 ஜெய்ப்பூர் கால்கள் யாழ். எடுத்துவர தடை

யாழ் மாவட்டத்திற்கென தருவிக்கப்பட்ட 400 ஜெய்ப்பூர் செயற்கைக் கால்கள் கடந்த ஏழு மாத காலமாக கொழும்புத் துறைமுகத்தில் தவம் கிடக்கின்றன இந்தியாவிலிருந்து மேற்படி செயற்கைக் கால்களில் 200 சிறுவர் பாதுகாப்பு நிதியமும், மற்றைய 200ஐயும் யாழ் மாவட்டத்தில் இயங்கும் ஜெய்ப்பூர் நிறுவனமும் இந்தியாவிலிருந்து கொள்வனவு செய்திருந்தன இச் செயற்கைக் கால்களை எடுத்து வர இராணுவம் அனுமதி

(10ஆம் பக்கம் பார்க்க)

# இறுதி வெற்றி கிட்டும் வரை யுத்தத்திற்கே முன்னுரிமை

## இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா

(கொழும்பு)

"இறுதி வெற்றி பெறப்படும் வரை யுத்தத்திற்கும்,யுத்தத்திற்கான பயிற்சிகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படவேண்டும். இதன் மூலம் நன்கு பயிற்சி பெற்ற படையினர் உருவாக்கப்பட வேண்டும்" இவ்வாறு சிறிலங்காவின் புதிய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி சில்வா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறும்போது தற்போது இருக்கும் படை அமைப்புக்களில் மறுசீரமைப்புச் செய்யப்படவேண்டும். இதற்கு ஜனாதிபதியின் அங்கீகாரமும் பெறப்படவேண்டும். இம் மறுசீரமைப்புப் பற்றி பொதுமக்களுக்கும் தெரியப்படுத்தப்படவேண்டும். ஏனெனில் நாம் அவர்களுக்காகவே யுத்தம் புரிகின்றோம். படை அமைப்புக்களில் மறுசீரமைப்புச்செய்வதன்மூலமே நன்கு பயிற்சி பெற்றுள்ள எதிரிக்கு எதிராக முகம்கொடுக்க முடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

எந்தவோர் இராணுவத் தளபதியும் கூடுதலான படையினரையே கேட்பார். இது இயற்கை.தப்பிஓடிய 12,000 பேரை மீளச் சேர்த்துக்கொண்டால்போதும். நல்லகுணநலப் பண்புடைய படையினரே யுத்தத்துக்குத் தேவை என மேலும் அவர் தெரிவித்தார்.

## புதிய ராணுவத் தளபதி வடபகுதி முகாம் விஜயம்

(கொழும்பு)

சிறிலங்காவின் புதிய இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா வடபகுதியிலுள்ள இராணுவ முகாம்களை அண்மையில் சென்று பார்வையிட்டார். இதன் போது பலாலி, ஆனையிறவு, பூநகரி முகாம்களுக்கும் சென்று பார்வையிட்டதாகவும் படையினர் மத்தியில் உரை நிகழ்த்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதிகாரிகளினதும் படையினரதும் சேமநலனுக்காக புதிய நடவடிக்கைகளை எடுக்கப்போவதாக அவர் குறிப்பிட்டார். இவருடன் வடபகுதி உயர் இராணுவ அதிகாரிகளும் சென்றிருந்தனர்.

## றம்பாவ குண்டுவெடிப்பு விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

றம்பாவ பொலிஸ் காவல் நிலையம் அருகே நேற்று முன்தினம் இடம் பெற்ற பஸ் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக பூரண விசாரணை யொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சிரேஷ்ட உதவி இரசாயன பரிசோதகர் டபிள்யூ. ஜீ. எஸ். குணதிலக தலைமையிலான குழு ஒன்று அங்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

வடமத்திய மாகாணத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி ரந்தெனியவின் ஆலோசனையின் பெயரில் உயர்மட்ட பொலிஸ் குழு ஒன்று விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது சம்பவத்தில் உயிரிழந்த 10 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் காயமடைந்த 42 பேரில் 17 பேர் பலத்த காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மன்னார்ப் பகுதியில் ராணுவம் பின்வாங்கியது

(யாழ்ப்பாணம்)

மன்னாரில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ வேலியில் 150 யார் நீளமான பகுதியிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் வெளியேறியுள்ளனர்.

கட்டைக்காட்டுப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ வேலியில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் இராணுவ வேலியிலிருந்து 150 யார் தூரம் பின்வாங்கி கட்டடம் ஒன்றில் நிலைகொண்டுள்ளனர்.

தற்போது சிறுநாவற்குளம் முதல் வங்காலை வரையிலான பத்து மைல் நீளத்துக்கு உட்பட்ட பகுதியிலேயே இராணுவவேலி அமைக்கப்பட்டுள்ளது.

மன்னார் தீவிலும் பெருநிலப்பரப்பின் சிறுபகுதியிலுமேயே தற்போது இராணு

(10ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள்வங்கியில் அடகு வைத்தோர் மார்ச் 31க்கு முன்னர் நகைகளை மீட்கவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச மக்கள் வங்கிக் கிளைகளில் நகைகளை அடகுவைத்தவர்களின் நகைகள் கொழும்பிலுள்ள மக்கள் வங்கி அடகு மீட்புப் பிரிவில் வைத்து வழங்கப்பட்டுவருகின்றது.

வரும் மார்ச் மாதம் 31-ம் திகதியுடன் நகைமீட்புப் பிரிவு வேலைகள் நிறுத்தப்படவுள்ளன. இந்தக் காலக்கெடுவுக்குப்பின் நகைகளை எடுப்பதில் காலதாமதம் ஏற்படுமென்று மக்கள் வங்கி யாழ் உதவிப் பிராந்திய முகாமையாளரின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

கொழும்புக்குச்சென்று

(10ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் பிரான்ஸ் மருத்துவர்

பிரான்ஸ் மருத்துவக் குழுவைச் சேர்ந்த இரு மருத்துவர்கள் மன்னார் வைத்தியசாலையில் பணிசெய்ய வந்துள்ளனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டமானின் பேரனே சமாதானம் ஏற்படாமைக்கு காரணம்

### செல்லச்சாமி குற்றச்சாட்டு

(கொழும்பு)

மத்திய மாகாணத்தில் முதல் அமைச்சருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானத்தை ஆதரித்து வாக்களிக்க தவறிய 8 இ. தொ. கா. மாகாணசபை உறுப்பினர்களின் மீதான தடையை நீக்கி சுமுகமான ஒரு சூழ்நிலையில் இ. தொ. கா நலன் கருதி நாம் செயல்பட வேண்டும். தலைவர் தொண்டமானுக்கு இதனைத் தெரிவித்த போது அதனை அவர் முழுமையாக ஏற்றுக்கொண்டார் என அக் கட்சியின் பொதுச்செயலாளர் எம். எஸ் செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் பி. பி. ஸிக்கு தெரிவிக்கையில் தான் எப்பொழுதும் சமாதான தீர்வுக்கு தயார் என்றும் ஒற்றுமைக்கு எந்த விதத்திலும் குந்தகம் விளைவிக்க கூடாது என்பதே தனது நோக்கம் எனவும் தெரிவித்தார்.

தொண்டமானின் பேரனும் அவர்களின் குழுவினரினதும் அச்சுறுத்தலுக்கு உட்பட்டு தொண்டமான் இருப்பதாகவும் இதனால் இவர் சுயமாக ஒரு முடிவை எடுக்க முடியாமல் திண்டாடுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

காமினி திசநாயக்காவை ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைக்குமாறு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுக்கு தான் ஏற்கனவே வேண்டுகோள் விடுத்ததாகவும், காமினி தனது உற்ற நண்பன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## காயமடைந்தவர் மரணம்

(நமது நிருபர்)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலால் படுகாயமடைந்து யாழ் போதனா மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த மயிலணி வடக்கு சுன்னாகத்தைச் சேர்ந்த இளையகுட்டி ராஜதேவி (வயது 30) என்பவர் நேற்றுக்காலை மரணமடைந்தார்.

நேற்று முன்தினம் மாலை 5 மணிமுதல் 7 மணி வரை பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து மக்கள் குடியிருப்பு மீது கண் மூடித்தனமான ஷெல் பீரங்கித்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதும் அதில் ஏழுபேர் படுகாயமடைந்ததும் தெரிந்ததே.

## செல்லச்சாமியின் வழக்கு பெப். 3வரை ஒத்திவைப்பு

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் எம். எஸ். செல்லச்சாமி கட்சி உறுப்பினர் பதவி விலக்கப்பட்டதை எதிர்த்து தாக்கல் செய்த மனுவை நீதிமன்றம் பெப்ரவரி 3ஆம் திகதி வரை ஒத்திப்போட்டுள்ளது.

அதுவரை தொடர்ந்து அவர் கட்சி உறுப்பினராக செயற்படமுடியும். இரு தரப்பினரும் பேச்சுக்களை நடத்த கிடைத்துள்ள ஒரு சந்தர்ப்பம் இதுவென அவதானிகள் கூறுகின்றனர்.

## புலிகளுக்குவெற்றிவேண்டி முல்லையில் யாகம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்காப் படையினருடனான போரில் விடுதலைப் புலிகள் வெற்றி பெற வேண்டும் எனவும், தமிழீழ மக்களுக்குச் சுபீட்சமான வாழ்வு கிடைக்க வேண்டும் எனவும் முல்லைத்தீவு மக்கள் யாகம் ஒன்றினைச் செய்துள்ளனர்.

கடந்த 9ஆம் திகதியிலிருந்து 19ஆம் திகதிவரையிலான பத்து நாள்கள் இந்த யாகம் செய்யப்பட்டது.

முள்ளியவளை தண்ணீரூற்றுப் பகுதியில் அமைந்துள்ள ஊற்றங்கரைப் பிள்ளையார் கோவிலிலேயே யாகம் நடை

(10ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனையாகிறது
உளவியலும் நவீன கற்பித்தலியலும் கலை இலக்கிய கோட்பாடுகள் கலாநிதி சபா.ஜெயராசா. விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம்.
(சி-8407)

### வெளியீடுகள்
தத்துவஞானி J. கிருஷ்ணமூர்த்தியின் சிந்தனைகள், சீரடிபாபாவின் அற்புதங்கள், ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் அருளுரைகள் நான் கடவுள் (ஆத்மா) சனி மாற்றம் விற்பனையாகின்றன. சோபிதா, புத்தகசாலை, யாழ்ப்பாணம். நூலாசிரியர்- prof சத்தியதாஸன். (7280)

### கோழிக்குஞ்சு
HYLINE BROWN பேட்டுக் குஞ்சுகள் பதிவுசெய்தவர்கள் உடன் தொடர்புகொள்ளவும். சேவல் குஞ்சுகள் பதிவின்றியும்கிடைக்கும். விறாத்துக் குஞ்சுகளும், ஒரு கிலோவிற்கு உட்பட்ட சேவல் குஞ்சுகளும்பெற்றுக்கொள்ளலாம். கலையரங்க அருகாமை, உரும்பராய் சந்தி. (7272)

### காணி விற்பனைக்கு
இராஜவீதி, ஞானபாஸ்கர வீதி ஆகியன சந்திக்கும் இடத்தில் நாலுபரப்பு காணி விற்பனைக்கு உண்டு. வீடு, கடைகட்டுவதற்கு உகந்தது. தொடர்புகொள்ளவேண்டிய முகவரி, து. சுந்தரலிங்கம். இராஜ வீதி, திருநெல்வேலி.
(7276)

### தாமரைச்செல்வி எழுதிய நாவல்கள்
தாகம், விண்ணில் அல்ல விடிவெள்ளி, படிக்கத் தவறாதீர்கள். தாமரைச்செல்வி கடந்த பதினைந்து ஆண்டுகளில் வாசகர்கள் நெஞ்சத்தில் தனியான தோர் இடம் பிடித்துவிட்டவர், கதையைச் சொல்வதில் தனிநடை, திறமை, புதுமை. (7275)

### றெனி மூக்குக் கண்ணாடி அகம்
உங்கள் கண்களை சரியாக பரிசோதித்துக் கண்ணாடி, உடன் வழங்கப்படும். இல. 288, நாவலர் வீதி, (யாழ். தனியார் வைத்திய சாலைக்கு முன்பாக), ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (7268)


## ஆச்சியின் காவல்

கட்டை ஒன்று நிமிர்ந்து நின்றது.

எல்லோருக்கும் குபீர் என்று சிரிப்பு வந்தது.

''கதைக்கிறதை ... சிரிக்கிறதை மெல்லமாகச் செய்யுங்கடா ... அநியாயப்படுவான்கள் வந்து சேர்ந்திடுவாங்கள்...'' - ஜெகன் எச்சரித்தான்.

நன்கு விடிந்த பின்னர்- மரத்திலிருந்து கீழிறங்கி- ஆச்சியின் வீட்டை நோக்கி நடந்தோம். வீதியில் சன நடமாட்டம் தெரிந்தது. இராணுவம் திரும்பிச்சென்றுவிட்டது என்கிற எண்ணம் உதயமானது.

ஆச்சியின் வீட்டை அண்மித்துவிட்டோம். வீட்டுக்குள் இருந்து புகை வெளிவருவதை அவதானித்தோம்.

''மச்சான் ... ஆச்சி சமைக்

(10ஆம் பக்கம் பார்க்க)


காரைநகர் கம்பன் கழகம்

# கம்பன் விழா 1994

இடம்: இளங்கலைஞர் மன்ற கலா மண்டபம்

காலம்: 21, 22 ,23 - 01 - 1994
காலை, மாலை

## நிகழ்ச்சிகள்

21-01-94 வெள்ளிக்கிழமை மாலை 4 மணி முதல் விழா மங்களம்

தலைவர்:
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
(தலைவர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

மங்கள இசை:
திரு. எஸ். சிதம்பரநாதன் குழுவினர்

மங்கள விளக்கேற்றல்;
திரு. பே. நாகரத்தினம்
திரு. க. நந்தகுமார்

கடவுள் வாழ்த்து;
செல்வி பரமேஸ்வரி கணேசன்

மனவணக்கம்:

வரவேற்புரை:
திரு. த. சிவகுமாரன்
(அமைப்பாளர், காரைநகர் கம்பன்கழகம்)

ஆசியுரைகள்:
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
சிவத்தமிழ்ச் செல்வி அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி

தலைமையுரை:

திறப்புரை;
பேராசிரியர் வே. தர்மரட்னம்
(தலைவர், கணித புள்ளி விபரவியற் துறை, யாழ். பல்கலைக்கழகம்)

தொடக்கவுரை:
திரு. புதுவை இரத்தினதுரை
(பொறுப்பாளர், கலை பண்பாட்டுக் கழகம், தமிழீழ விடுதலைப் புலிகள்)

பட்டிமண்டபம்
மண்டப நடுவர்:
திரு. இ. ஜெயராஜ்
(அமைப்பாளர், அ. இ. கம்பன் கழகம்)

மண்டபப் பொருள்:
### "கம்ப காவியம் காலம் கடந்து நிலைக்கப் பெரிதும் காரணமாவது"

| அறச்சிந்தனையே! | கவித்துவமே! | பக்திச்சார்பே! |
|---|---|---|
| திரு இரா.செல்வவடிவேல் | திரு.க.நாகேஸ்வரன் M A. | திரு.பொன்.கணேசமூர்த்தி |
| திரு. கி. சிவனேசன் | திரு. ந. கணேசமூர்த்தி | திரு.மு.சு.வேலாயுதபிள்ளை |
| திரு. ஆ. திருமுருகன் B. A. | திரு. த. சிவகுமாரன் | திரு. தி. திருநந்தகுமார் |

மூன்று கட்சிகளின் தொகுப்புரை
நோக்கர்கள் ஒரு கட்சியை விலக்கலும் விளக்கமும் நடுவர் தீர்ப்பு
நோக்கர் சபைத் தலைவர்;
திரு. கோ. சி. வேலாயுதம் (பிரதிக் கல்விப் பணிப்பாளர்)

22. 01. 94 சனி காலை 9 மணி முதல்

கம்பன் இசையமுது
வழங்குபவர்; திரு. நடேசன் சிவசண்முகமூர்த்தி

கலைதெரி அரங்கம்:
தலைவர்: திரு. இ. நமசிவாயதேசிகர்
பொருள்: "எதை எதை வியப்பம் என வரு வளப்பம்"
(கம்பனின் கடவுள் வாழ்த்துக்கள், நாடக உத்திகள், அரசியல் ஆலோசனைகள்)

மாலை நிகழ்ச்சிகள் 4 மணி முதல்

இலக்கியச் சோலை:
தலைவர், கலாநிதி காரை செ.சுந்தரம்பிள்ளை
பொருள்: "பேசாப் பொருட்கள் பேசிடத் துணிந்தால்..."
படைத்தவனைச் சந்திக்கும் பாத்திரங்கள் — இவ்வாறு படைத்தாயே ஏன்?
படைத்தவனாக, திரு. இ. ஜெயராஜ்

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்
த சிவகுமாரன் (அமைப்பாளர்)

விளம்பர உதவி: திரு. கனகசபை தர்மகுலசிங்கம்
காரைநகர்
(சி-8425)


## நினைவு கூருகின்றோம்...
## 1994-01-21

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழீழக் கடற்றொழிலாளி, முகத்துவாரம் சிறிலங்கா காவல் நிலையத்தில் சிறிலங்கா காவற்படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த காவற்துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

1988ஆம் ஆண்டு அம்பாறை- தாண்டியாப்பகுதியில் இந்தியப்படையினர் கைது செய்ய முயன்றபோது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய.

**2-ம் லெப்.புவி** (இளையதம்பி ஆனந்தன் -றொட்டைக்குளம், பொத்துவில்-03-அம்பாறை)

1989ஆம் ஆண்டு மணலாறு - நெடுங்கேணிப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட கைக்குண்டுத்தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். வின்சன்** (பரமசாமி ஜெபரூபன்-சரசாலைமத்தி, சாவகச்சேரி-யாழ்)

இதே சம்பவத்தின் போது இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

1990ஆம் ஆண்டு முல்லைத்தீவினில் வீரச்சாவெய்திய,

**லெப்.அகிலன்** (பொன்னுச்சாமி நற்குணேஸ்வரன் -உதயநகர் கிழக்கு-கிளிநொச்சி)

யாழ்-அரியாலை. மணியந்தோட்டப் பகுதியில் தேசவிரோதக் குழுவினரின் முகாம்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**அழகன்- அன்பழகன்** (முருகேசு ரவீந்திரன்-தம்பகாமம், இத்தாவில்-பளை)

**ஜீவன்** (பிலிப் செல்வராசா-பழையபூங்காவீதி, குருநகர்-யாழ்)

**பவான் - பகவான்** (துரைசாமி இராஜேந்திரன் நுணாவில் கிழக்கு-சாவகச்சேரி-யாழ்)

**நரசிம்மன்** (ஜெயபாலசிங்கம் விமல்ராஜ் -கடற்கரைவீதி, உதயபுரம்-யாழ்)

1991ஆம் ஆண்டு மட்டு-குறிஞ்சாமுனைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலின் போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**மயூரன்** (சி இராமச்சந்திரன்- வீராடுமுனை மட்டு)

மட்டு-பாவற்கொடிச் சேனையில் எதிர் பாராத விதமாகக் குண்டு வெடித்ததில் எமைப்பிரிந்த,

**சுந்தரம்** (மாசிலாமணி திருச்செல்வம்- சின்ன முனைக்காடு-மட்டு)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட வந்தாறுமூலை, களுவங்கேணிப் பகுதிகளைச்சேர்ந்த 02 தமிழர்கள்.

1992ஆம் ஆண்டு மட்டு - வட்டப்போட்டமடுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய ,

**திவாகரன் | கொக்குலர்** (கந்தசாமியுதன்-கும்புறுமூலை, மட்டு)

நாட்டுப்பற்றாளரான-

**இராசா** (கறுவாக்கேணி - மட்டு)

திருகோணமலை - சலப்பையாறு முகாமிலிருந்து குச்சவெளி நோக்கி ரோந்துசென்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது இரணைக்கேணிப்பகுதியில் வைத்து மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**மேஜர் சிவதாஸ்-அருள்நம்பி** (முருகையா சிவானந்தன் - திருகோணமலை)

**கப்டன் ஜெயன்-பாணன்** (நாராயணன் தங்கராசா-நொச்சிக்குளம் - திருகோணமலை)

**கப்டன் உதயன்-செங்கதிர்** (கண்ணன் இராசேந்திரன்-அட்டன்-மலையகம்)

மணலாறு-கொக்குத்தொடுவாய், கோட்டைக்கேணி முகாமருகில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

**கலைவேந்தன்-சிவராம்** (வடிவேலு குணதீஸ்வரன் (குணம்) -கந்தர்மடம்-யாழ்)

**அன்பாளன்** (பத்மநாதன் பத்மகுமார்- கொருடாவில், தொண்டமானாறு-யாழ்)

மட்டக்களப்பு - காஞ்சிரங்குடாப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 3 தமிழர்கள். சித்தாண்டிப் பகுதியில் கொல்லப்பட்ட 4 தமிழர்கள்.

திருகோணமலை - மூதூர், சம்பூர் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 09 தமிழிளைஞர்கள், இதே தினத்திலிருந்து நான்கு தினங்களாக இம் மாவட்டத்தின் சில கிராமங்களைச் சுற்றிவளைத்திருந்து சுட்டுக் கொல்லப்பட்ட கிண்ணியா, ஆலங்கேணியைச்சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-8423)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
சண்டிக்குளி கிளை நூலகம்.

# கறுப்பர்கள் ஆட்சி மலரும் வேளையிலும் குமுறிக் கொண்டிருக்கும் தென்னாபிரிக்கா

இம் மாதம் 17ஆம் திகதி பிரிட்டோரியா- நகரம் இதுவரை கண்டிராத காட்சியொன்றை காணநேரிட்டது. முப்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட சூலுகறுப்பின மக்கள் தமது பழைய மறவர் பரம்பரையை நினைவு படுத்தும் வண்ணம் ஈட்டி, கோடரி குண்டாந்தடி, கவசங்கள் தாங்கிய வண்ணம் நகர் நோக்கிப் படையெடுத்தனர். அன்றுதான் அவர்களது தாயகப் பகுதியான குவாசுலுவின் (Kwazulu) மன்னன் குட்வில்சுவெத்திலினி (Good-will zwetheleni) தென்னாபிரிக்க சனாதிபதி டிகிளார்க்கை தனது பகுதி மக்களது எதிர்காலம் குறித்து பேச்சுக்கள் நடத்திய நாளாகும். இம்மக்களின் படையெடுப்பால் கலவரங்கள் வெடித்தன; பலர் மாண்டனர்; சனாதிபதியின் அலுவலகப் பகுதியே பலத்த பாதுகாப்புக்கு உட்பட்டது. மீண்டும் வன் முறைகள் தொடர, கறுப்பினத்தவர் குருதி நீராக மீண்டும் அங்கு ஓடுகின்றது. சூலுமக்களையும் மன்னரையும் தனது செல்வாக்கில் வைத்திருக்கும் சூலுக் கட்சியான இன்காதா சுதந்திரக் கட்சியின் தலைவரான புத்தலேசியே தமது எதிர்காலம் பற்றிய 'உத்தரவாதங்களைப் பெற இத்தகைய அழுத்தங்களை மேற்கொள்ளுகிறார்.

இவ்வாறு இவர்களும் சிறுபான்மை வெள்ளையின தீவிரவாதிகளும் அச்சமுற்று பரபரப்பு அடைவதற்குபிரதான காரணம் எதிர்வரும் ஏப்ரல் மாத தேர்தலில் A. N. C எனப்படும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்(ஆ. தே. கா) அறுதிப் பெரும்பான்மை பெறப் போவதுஇப்போது ஏறத்தாழ நிச்சயமாகிவிட்டதுவேயாகும் அண்மையில் நாடுமுழுவதும் மேற்கொள்ளப்பட்ட கணிப்பொன்றின்படிஆ.தே காங்கிரசுக்கு 58வீதமான வாக்குகள் கிடைக்கும் என்றும் இன்காதா கட்சிக்கு (போட்டியிட்டால்) 10 வீத வாக்குக்களே கிடைக்கும்என்றும்தெரியவருகின்றது. அதுபோலவே கிளார்க்கின் தேசியக் கட்சிக்கு 13 வீத வாக்குகளும் தீவிரவாத வெள்ளையர் கட்சிகட்கு 5 வீத வாக்குக்களே கிடைக்கும் என்றும் கணிப்பிடப்பட்டுள்ளது. இப்போது ஆ.தே.கா அடுத்த ஆட்சியை அமைப்பதும், அதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்கப் போவதும் உறுதியாகிவிட்டது. அதுமட்டுமன்றி மன்டேலா உறுதியான மத்திய அரசைக் கொண்ட ஒரளவு அதிகாரங்களையே மாகாணங்கட்கு வழங்கும் ஒருஒற்றையாட்சித் தன்மை வாய்ந்த நிரந்தர அரசியல் யாப்பினை வரைய முடியும் என்பதும் இவர்க்ள் அச்சத்திற்கான உடனடிக் காரணமாகும். அதுமட்டுமன்றி புதியதாக அமைக்கப்படப் போகும் 9மாகாணப் பிரிவுகளில் ஆறினது(06) நிர்வாகம் மன்டேலாவின் கட்சியிடமே சேரும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே தமது தாயகமான குவாசுலுப் பகுதி உள்ளடங்கும் நேத்தால் (Natal) மாகாணத்திலே மட்டும் புத்தலேசி செல்வாக்குப் பெற முடியும். எனவே இவரும் இவரின் நிலையை ஒத்திருக்கும் சிறுபான்மை தீவிரவாத வெள்ளையரும் புதிய தற்காலிக அரசமைப்பை நிராகரித்து வரும் தேர்தலை புறக்கணிக்கப் போவதாக கூறிவிட்டனர்.

எனவே இரண்டுவருடகால நீண்ட பேச்சுவார்த்தையின் பின் மன்டேலாவினாலும் கிளார்க்காலும்கைச்சாத்திடப்பட்டு வேறும் 17 கட்சிகள் ஏற்றுக்கொண்ட புதிய அமைதித் திட்டத்தை இவர்கள் நிராகரிப்பது மட்டுமன்றி, புதிய உள்நாட்டுப் போரொன்றை உருவாக்கும் சகல முயற்சிகளிலும் ஈடுபடுவதாக் இப்போது தெரிவிக்கப்படுகின்றது. தென்னாபிரிக்க வரலாறு காணும் விந்தையாக இவ்விரு இனத்தவரும் புதியதொரு அரசியல் கூட்டணியை சுதந்திரக் கூட்டணி (Freedom Alliance) என்கிற பெயரில் தோற்றுவித்துமுள்ளனர். இக்கூட்டணி ஒன்றுக்கொன்று முரண்படும் சக்திகளைக் கொண்டுள்ளது இன்காதா கட்சி வெள்ளையரின் பழைமை பேண்கட்சி. தீவிரவாத வெள்ளையினத் தலைவரானகொன்ஸ்தான்ட் வியோஜன் (Constand Vilgo-en) என்பவரின் ஆபிரிக்காளர் தாயகக் கட்சி, மற்றும் கறுப்பின தாயகப் பகுதிகளை சிஸ்காய் (Ciskei) போபுத்துவானா பகுதி அரசுகள் என்பன இதில் அங்கம் வகிக்கின்றன. இவர்கள் இப்போது தத்தமது பகுதிகளில் இராணுவப்பயிற்சிகளை தத்தமது உறுப்பினர்கட்கு வழங்கி ஆயுதங்கள் வழங்கத் தொடங்கி விட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இவ்வாயுதங்கள் இப்போது அண்டை நாடுகளான அங்கோலா, மொசாம்பிக்கிலிருந்து கடத்தி வரப்படுவதாக கூறப்படுகின்றது. இவ்வாயுதங்கள் முன்னர் தென்னாபிரிக்க அரசால் இந்நாடுகளில் இருந்த சோவியத் சார்பான அரசுகட்கு எதிராக போராடிய குழுக்கட்குவழங்கப்பட்டவை என்பதும் குறிப்பிடத்தக்கது. குவாசுலுப்பகுதியில் 'தற்பாதுகாப்புப் பிரிவுகள்' என பல இராணுவரீதியான குழுக்கள் அமைக்கப்படுகின்றன. அதுபோலவேமுன்னாள்இராணுவத் தளபதியான Viljo-en விரைவில் போரொன்றிற்கு தயாராகும் படி கூறி தென்னாபிரிக்க இராணுவத்தின் மறைமுக உதவியோடு பல்லாயிரக்கணக்கான வெள்ளையர்கட்கு தீவிர இராணுவப்பயிற்சிவழங்குவதாக கூறப்படுகின்றது இவரின் வேண்டுகோளை ஏற்று ஆயிரக்கணக்கில் கிராமப்புறங்களில்வெள்ளையின விவசாயிகள் கூடியதாகவும் இவர்கட்கு ஆயுதப்பயிற்சியின் பின் தன்னியக்க துப்பாக்கிகள் வழங்கப்பட்டு தயார் நிலையிலிருக்குமாறு பணிக்கப்பட்டதாகவும் தெரிகின்றது.

எனவே விடிவை நோக்கிய பாதையில் வேகமாக முன்னேறும் மன்டேலாவின் பக்கமாக பாரிய சிக்கல்கள்காத்து நிற்கின்றன. முதல் தடவையாகதமது அரசை அமைக்கப் போகும் கறுப்பின மக்களின் எதிர்பார்க்கைகளோ ஏராளம். மோசமான நிலையில் இருக்கும் தென்னாபிரிக்க பொருளாதாரத்தை உயர்த்த வேண்டியது ஒருபுறம் மறுபுறமோ காலம் காலமாக புறக்கணிக்கப்பட்டு அறியாமையிலும் மோசமான வாழ்க்கைச் சூழலிலும் வாடிய மக்களின் கல்வி, வீட்டுவசதி சுகாதாரம், வேலைவாய்ப்பு நிலமின்மை போன்ற பல் துறைகளில் பெரு முன்னேற்றத்தினை மன்டேலா உடனடியாகவே காட்ட வேண்டும். தனது முன்னைய பொதுவுடமை பாற்பட்ட தேசியமயமாக்கல் கொள்கைகளை கைவிட்டு தனியார் முயற்சிகளை, வெள்ளை தொழில் முயல்வோரின் ஆற்றலையும் பயன்படுத்தத் தக்க வகையில் கொள்கை மாற்றங்களை ஆ. தே. காங்கிரஸ் செய்துள்ளது. முன்னர் தென்னாபிரிக்காவின் செல்வ வளத்திற்கு காரணமான வைரச் சுரங்கங்கள்இப்போதுபயனற்றவையாகவும் வீழ்ச்சியடைந்தும் சருவதேச வர்த்தக நிலைமைகள் காரணமாக தென்னாபிரிக்க சுரங்கத் தொழில் மிகப்பாதிப்படைந்தும் இருப்பது இங்கே சொல்லப்படவேண்டிய செய்தியாகும். ஆனால் அதேசமயம் நீண்டகால புறக்கணிப்பு காரணமாக சீர் கெட்டு மோசமான மனநிலையில் வெள்ளையரை பழிவாங்க விரும்பும் புதிய கறுப்பின இளைய தலைமுறையினை எவ்வாறு மன்டேலா கையாளப் போகிறார் என்பதும் இன்றுள்ள பெரிய கேள்வியாகும். அண்மைக் காலமாக நிறவேற்றுமைக் கொள்கை கைவிடப்பட்ட நிலையிலும் தென்னாபிரிக்காவில் வெள்ளையருக்கு எதிராகப் பெருகி வரும் கொலை, கொள்ளை முயற்சிகள் வீதம் மிக வேகமாக அதிகரிக்கின்றன. குறிப்பாக வெள்ளையர் சொத்துக்கள் சூறையாடப்படுவது வழமையாகிவிட்டன. ''எமது நிலங்களை அன்று பறித்தவரிடம் இன்று நாம் பறிக்கிறோம்'' என்பதே இவர்கள் ஒலிக்கும் குரல். தேசிய செல்வத்தில் 2 வீதத்தைத் தன்னும் பகிர விருப்பின்றி கறுப்பினத்தவரில் 50 வீதத்திற்கும் மேலாக வேலை வாய்ப்பின்மை என்னும் நச்சுவட்டத்துள் தள்ளியதன் விளைவுகளே இவை என சமூகவியலாளர் கூறுகின்றனர். எது எப்படியிருந்த போதும், நிலைமைகளைச் சீர் செய்ய வேண்டிய பொறுப்பு மன்டேலா மேலே இன்று விழுந்துள்ளது. உடனடியான விளைவுகளை, மாற்றங்களை மன்டேலா காண்பிக்கா விட்டால் பெற்ற விடுதலையின் பயன் என்ன என்ற வினாவெழும்புவது தவிர்க்க முடியாததாகி விடும். ஏனென்றால் 92-ம்ஆண்டில் மொத்தமாக கொல்லப்பட்ட 16,000 பேரில்அரசியல் காரணங்கட்காகக்கொல்லப்பட்டவர் ஐந்தில் ஒரு பகுதியினரே. மிகுதியானோர் இப்படியான கலவரங்களில் சிக்கி மாண்டவர் ஆவார்.

இதற்கிடையில் கறுப்பின மக்கள் விடிவை நோக்கி நகருகையில் தென்னாபிரிக்க இந்திய இனமோ தனது எதிர்காலம் குறித்து அச்சமடையத் தொடங்குகின்றது. அண்மையில் டேர்பன் நகரில் தென்னாபிரிக்க இந்தியர்க்கு சொந்தமாக விருந்த- முன்னர் தென்னாபிரிக்கா அரசால் பறிக்கப்பட்ட இருப்பிடப் பகுதிகளை இப்போது கறுப்பின மக்களே ஆக்கிரமித்துவிட்டனர். நெல்சன் மன்டேலாவேஇவர்களை வெளியேறுமாறு கோரிக்கை விடுத்தும் பயனேற்படவில்லை ''அதுமட்டுமன்றி வரப்போகும் புதிய அரசின் கொள்கைகளுக்கேற்ப நிறுவனங்களில் வேலைவாய்ப்புக்கள் கறுப்பினத்தவர்கட்கே வழங்கப்படுவதும் தாம் வேலை வாய்ப்புக்களைப் பெற முடியாத நிலைமைகளை உருவாக்குவதாக இம் மக்க்ள் குறைப்படத் தொடங்குகின்றனர்.

தென்னாபிரிக்க இந்திய மக்கள்நிலைஇன்று இக்கட்டிலேயே உள்ளது. இம்மக்களை தென்னாபிரிக்க வெள்ளையர் அரசால் பாதிக்கப்பட்டோராகக் கருதுவதைவிட அவர்கட்கு எதிரான தமது போராட்டத்திற்கு முழுமையாக ஆதரவு அளிக்காதோராக கருதப்படும் எண்ணமே கறுப்பின மக்களிடம் மேலோங்கி நிற்பதாக கூறப்படுகின்றது. ஏனென்றால் 19ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் 1860களில் இந்தியாவிலிருந்து குடியேறிய இம் மக்களை பிரித்தாளும் தந்திர அடிப்படையில் தென்னாபிரிக்கா கையாண்டது. இதனால் கல்வி, வேலை வாய்ப்புக்கள் போன்ற சில சலுகைகள் வழங்கப்பட்டதை அப்போதைய இந்திய சமூகம் முற்றாக பயன்படுத்தியது. இதன் பயன் தென்னாபிரிக்க இந்தியரில் 75வீதமான ஆண்களும் 25வீதமான பெண்களும் வேலை வாய்ப்பினைப் பெற்றுள்ளனர். அத்தோடு இம் மக்களின் 80 வீதமானோர் சூலுத் தலைவர் புத்தலேசியின் செல்வாக்குள்ள நேத்தால் மாகாணத்தில் வாழ்வதால்எதிர்கால அரசை அமைக்கப்போகும் மன்டேலாவிற்கு முழுமையான ஆதரவு அளிப்பார்கள் எனக்கருத முடியாது. இவர்கள்வாக்குகளைப்பெறஎல்லாக்கட்சிகளும் முயல்கின்றபோதுஇம்மக்களில் பெரும்பான்மையோர் முடிவேதும் எடுக்கமுடியாத நிலையிலேயுள்ளனர். காந்தி முன்னர் நிறவேற்றுமைக்கு எதிராக தனது முதல் போராட்டத்தைஆரம்பித்ததாகக் கூறப்படும் இப்பகுதியில் நிலைமை இன்று முற்றிலும் வேறுபட்டது. 1949-ம் ஆண்டு இப்பகுதியில் இந்தியர்க்கு எதிராக கலவரம் வெடித்து பல நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். பின்னர் 1985-ம் ஆண்டுஇன்னுமொரு கலவரத்தில் காந்தி வசித்த அவரது ஆச்சிரமமே சூறையாடப்பட்டு நாசமாக்கப்பட்டது. எனவே ஆபிரிக்க தேசியக் காங்கிரசுக்கு ஆதரவு அளிக்கும் இந்திய அரசுக்கு இந்நிலைமைகள்கவலையைக் கொடுத்திருப்பதாகத் தெரிகின்றது.

இத்தகைய பல சிக்கல்கட்கு மத்தியிலும் மன்டேலாவிற்கு ஆறுதல்அளிக்க்கூடியநிலைமைகளும் தோற்றம்பெறுகின்றன இதுவரை காலமும் எதிர்ப்புக் காட்டிய தீவிரப் போக்குடைய முக்கிய கறுப்பினக் கட்சியான பரந்த ஆபிரிக்க காங்கிரசும் (Pan African Congress) அதன் இராணுவப் பிரிவான அசேனிய மக்கள் விடுதலை இராணுவமும் (APLA) தமது எதிர்ப்பை நிறுத்தி ஒத்துழைக்க முன்வந்துள்ளன. அதுபோலவே சூலுத் தலைவர் புத்தலேசிக்கு மேற்குலக அழுத்தம் கடுமையாகப் பிரயோகிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது அத்தோடு எதிர்ப்புக்காட்டும் கறுப்பின தாயகப்பகுதி ஆட்சியாளர்க்கு தென்னாபிரிக்க அரசேநிதிவழங்கிவருகின்றது. எனவே தேர்தலில் பங்கு பற்றுவது குறித்து இவர்கள் சிந்திப்பதாகக் கூறப்படுகின்றது. இதனால்சுதந்திரக் கூட்டணிக்குள் பிளவுகள் ஏற்படும் எனக் கருதப்படுகின்றது. என்றாலும், புத்தலேசியும் அவரது வெள்ளை தீவிரவாத குழுக்களும் அழிவுகளையும்கலவரங்களையும்தோற்றுவிப்பர் என்பதால் இவர்கட்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுக்க நேரிடும்போது மீண்டும் கறுப்பர் குருதி பாய்வது தவிர்க்க முடியாததாகி விடும்இதுவே இன்றைய நிலை

எனவே அழிவும் ஆக்கமும் அருகருகே அமைந்திருக்கும் தென்னாபிரிக்காவின் புதிய சனாதிபதி மன்டேலா இதுவரை காலமும் விடப்பட்ட பாரிய தவறுகளின் சுமைகள் யாவற்றையும் தாங்க வேண்டியிருப்பது வரலாற்றின் சோகமான பக்கமாகின்றது.

வெள்ளையர்க்கு எதிராக முதலில் தென்னாபிரிக்காவில் காந்தியே நிற வேற்றுமைக்கு எதிராக போராட்டத்தை ஆரம்பித்ததாக கூறப்படுகிறது ஆனால் இன்று தென்னாபிரிக்கா வாழ் இந்தியர் தமது நிற வேற்றுமைக்கு எதிரான போராட்டத்திற்கு ஆதரவு அளிக்கவில்லையெனகருதும் கறுப்பின மக்கள் இம்மக்களைப் புறக்கணிக்கும் அபாயம் தோன்றுகின்றது. வெள்ளையரின் பிரித்தாளும் தந்திரம் காரணமாகவும் இந்தியரின் இந்துமத நிறுவனங்கள் தமது குறுகிய போக்கு சாதி அடிப்படையிலான பாகுபாடுகள் காரணமாக இப்போராட்டத்திற்கு ஆதரவு அளிப்பதை தடுத்ததாலும் இவ்வெறுப்பு வேர்விட்டதாக கருதப்படுகிறது.

**பாலகுமாரன்**

## புறப்படுவோம் போர்க்களம்!

சிங்களப் பகைவர் இங்கே
தங்கிடும் முகாம்கள் எல்லாம்
வேங்கைகள் காலில்வீழ்ந்து
வெற்றிகள் சூடும் நேரம்
வந்ததே! தமிழா எழுந்து
பொங்கிடு புலியாய் நீயும்!
இங்கெவர் எதிர்த்த போதும்
உதைக்கலாம்என்றேஎழும்பு!

தாயவள் நாட்டில் இனியும்
தருக்கரின் முகாம்கள்
இருக்கா
திருக்கவே வழிகள்
செய்வோம்!
பெருக்குவோம் படையை
எங்கள்
வீரத்தை இன்றே நாமும்
ஒருபெரும் தலைவன்
பின்னால்
திரளுவோம்: போரில் எங்கும்
வெற்றிகள்சூடுவோம்; வாடா!

— வேலணையூர் சுரேஷ்

எதிர்வரும் தேர்தலில் தோல்வியைச் சந்திக்கக் கூடும் என்பதை உணர்ந்து கொண்டுள்ள ஐக்கிய தேசியக்கட்சி அதிலிருந்து தப்பிக் கொள்ள திட்டமிட்டு சில நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது. இதற்காக எதிர்க்கட்சிகளையும் மக்களின் செல்வாக்குப் பெற்ற ஏனையகட்சிகளையும் பிளவுபடுத்தி தான் தேர்தலில் வெற்றி பெறத்திட்டம் தீட்டி வருகிறது.

கட்சிகளைப் பிளவுபடுத்துவதன் மூலம் எதிர்க்கட்சிகளுக்குக் கிடைக்கும் வாக்குகளைச் சிதறடித்து தேர்தலில் தனக்குக் கிடைக்கவிருக்கும் குறைந்தளவு வாக்குகளைக் கொண்டு தொடர்ந்தும் ஆட்சியைக் கைப்பற்ற திட்டம் வகுத்துச் செயற்படுகிறது. வடக்குக் கிழக்குப் பிரச்சினை, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, காணாமல் போனவர்களின் புதைக்கப்பட்ட எலும்புக்கூடுகள் வெளிவருவது என்பன ஐக்கிய தேசியக்கட்சியின் செல்வாக்கைப் பெரிதும் சரித்துள்ளன. ஐக்கிய தேசியக்கட்சி தொடர்ந்தும் ஆட்சிக்கு வருவதற்காக மக்களிடையே சென்று வாக்குகளைப்பெறுவது சிரமமாகிவிட்டது. சென்ற ஆண்டு நடைபெற்ற மாகாணசபைத்தேர்தல் முடிவுகள் எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக்கட்சிக்கு உள்ள வெற்றி வாய்ப்புகள் குறித்து கேள்வியெழுப்பியுள்ளன.


இதேவேளை சர்ச்சைக்குரிய தென்மாகாணசபையிலிருந்து எதிரணி உறுப்பினரைக் கடத்திச்சென்று பொதுசன ஐக்கிய முன்னணியைக் குழப்பியடித்த ஐ.தே.க. தான் நினைத்தவாறே மாகாணசபையை கலைக்கும் முயற்சியிலும் வெற்றி பெற்றது. ஆனால் இக்கலைப்பிற்காக பதவி ஆசை காட்டி இழுக்கப்பட்ட ஜனநாயக ஐக்கிய முன்னணியின் வேட்பாளர் விமால் பிரான்கோவிற்கு இன்று தென்மாகாண சபை தேர்தலில் போட்டியிடுவதற்கு இடம் ஒதுக்கிக் கொடுக்காது அவரின் காலை வாரி விட்டுள்ளது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் இன்று மூன்றாகப் பிளவுபட்டுள்ளது. இதன் உறுப்பினர்களிடையே நாளாந்தம் கருத்து வேற்றுமை அதிகரித்து வந்துள்ளமையைக் காணக்கூடியதாக உள்ளது. இப்பிளவிற்கு ஆளும் ஐக்கிய தேசியக்கட்சியே பிரதான காரணியாக செயற்படுகிறது. இதனால் மூன்றாவது சக்தியாக விளங்கும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி இருந்த இடம் தெரியாமல் போகும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. கட்சியில் ஏற்பட்ட இந்தப் பிளவின் காரணமாக கட்சியின் வருடாந்த மாநாடு பல தடவைகள் ஒத்திப் போடப்பட்டுள்ளது. இம்மாநாடு எதிர்வரும் 22-ம்திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் தென்மாகாணசபைத் தேர்தலில் ஜனநாயக ஐக்கிய முன்னணி தனியாகப் போட்டியிடுவது என்ற முடிவை எடுத்திருந்த போதிலும்கூட சிறிமானி அத்துலத்முதலி பொது மக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்து தான் வேட்பாளர்களை நிறுத்தப் போவதாகக் கூறியுள்ளார். தற்பொழுது சிறிமானி அணியிலுள்ள பிரமுகர்கள் தென் மாகாணசபைத் தேர்தலில் பொது மக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்து போட்டியிடவுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைய முன்னர் எடுத்த முயற்சிகள் தோல்வி அடைந்ததை அடுத்து அம்முயற்சியிலிருந்து பின்வாங்கியிருந்த காமினி, தற்போது மீண்டும் தனது முயற்சியைத் தீவிரமாக்கியுள்ளார். இவரது எதிர்ப்பாளர் சுமத்தும் இக்குற்றச்சாட்டை இவர் இதுவரை மறுக்கவில்லை என்பதுடன் திரைமறைவில் தரகர்கள் மூலம் இதற்கான பேச்சில் ஈடுபட்டும் வருகிறார்.

இவர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்வதற்காகத் திகதியிடப்படாத விண்ணப்பப் படிவத்தை கட்சியின் பொதுச் செயலாளருக்கு அனுப்பி வைத்திருப்பதாகவும் தற்போது இறுதிக் கட்டப் பேரம் இடம்பெறுவதாகவும் வேறொரு செய்தி கூறுகிறது. எதிர்வரும்




இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் ஏற்பட்ட பிளவிற்கு ஐக்கிய தேசியக்கட்சி காமினி இரகசிய உறவும் வெளிச்சக்திகளின் தலையீடுமே காரணம் என கூறப்படுகிறது.

கொண்ட ஒப்பந்தத்தை மீறினார் எனவும் அமைச்சர் தொண்டமான் மீது குற்றச்சாட்டுச் சுமத்தி அவரைவெளியேற்றிவிட்டு அவரது இடத்திற்கு கலாநிதி விக்கிரம வீரசூரியவிற்கு எம்.பி. பதவியும் அமைச்சர் பதவியும் வழங்கப்படலாம் எனச் சொல்லப்படுகிறது. இதனை ஐ.தே.க. வில் பலர் விரும்புவதாகவும் தெரியவருகிறது.

மேலும் டி.பி. விஜேதுங்கவும் காமினி திசநாயக்கவும் இணைந்து தொண்டமான், செல்லச்சாமி ஆகியோரின் செல்வாக்கை குறைக்க முயற்சிக்கலாம் இதற்கு அவர்கள் இருவரும் தாம் 'மலைநாட்டு சிங்களவர்' என்பதைப் பயன்படுத்தலாம்.

இதற்கு முன்னோடியாக இ.தொ.கா.வை பிளவுபடுத்துவதன் மூலம் மலையகத்தில் இ.தொ.காவிற்கு இருந்து வரும் தனிப்பெரும் செல்வாக்கை குறைக்க டி.பி.விஜேதுங்க செய்த சதியே இ.தொ.கா பிளவுபடக் காரணம் எனக் கூறப்படுகிறது.

எனவே தேர்தல் ஆண்டிற்கு முன் முக்கிய எதிர்க்கட்சி

# சரிந்துவரும் செல்வாக்கை சரிக்கட்ட எதிரணிகளைப் பிளவுபடுத்தும் ஐ. தே. க.

சென்ற ஞாயிற்றுக்கிழமை கொக்கலை சுதந்திரவர்த்தக வலய இரண்டாம் கட்டத்தின் திறப்பு விழாவிற்கும் அதனைத்தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கும் சில நூற்றுக்கணக்கான மக்கள் மட்டுமே கலந்து கொண்டமையும் கூட்டத்திற்கு ஆட்சேர்க்க பகீரதப் பிரயத்தனம் செய்யவேண்டி ஏற்பட்டமையும் ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஏற்பட்டு வரும் செல்வாக்குச் சரிவைக் காட்டுவதாக அவதானிகள் கூறுகின்றனர்.

இந்நிலையில் எதிர்க்கட்சிகளைப் பிளவுபடுத்தி கட்சிகளிலிருந்து வெளியேறி வருபவர்களுக்கு பதவியும் பணமும் மற்றும் சலுகைகளும் வழங்க ஐக்கியதேசியக்கட்சி தயாராகியுள்ளது. ஆனால் இதற்கு ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்களிடையே எதிர்ப்புகள் கிளம்பியுள்ளபோதும் அதனைக்கட்சியின் தலைமை பெரிதாகப் பொருட்படுத்தவில்லை.

இதனடிப்படையில் பலம் வாய்ந்த எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்தி அதிலிருந்து அநுராவை வெளியேற்றி அவருக்கு பாராளுமன்ற உறுப்பினர், மந்திரி பதவி என்பன வழங்கப்பட்டுள்ளன.

சந்திரிகா குமாரணதுங்க சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்டமையும் அதனால் அக்கட்சியில் ஏற்பட்ட புத்தூக்கத்தையும் உணர்ந்து கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி அதனைச் சிதைக்க இந்நடவடிக்கையை எடுத்தது. அதேவேளை அநுரா வெளியேறிவிட்ட போதிலும் கூட அநுரா ஆதரவாளர்கள் சுதந்திரக்கட்சிக்குள் இருந்து கொண்டு பிரச்சினையை தனியவிடாது பார்த்துக் கொள்வதில் ஈடுபட்டுவருகின்றனர்.

இவ்வருடாந்த மாநாட்டை ஒத்திவைத்தது தொடர்பாக ஒரு குழுவினர் நீதிமன்றம் சென்றுள்ளனர். பிரேமச்சந்திர தலைமையிலான அணியினரே இவ்வாறு நீதிமன்றம் சென்றுள்ளனர். இவர்கள் கட்சியின் தலைமைப் பீடத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளனரே தவிர கட்சியின் விதிமுறைக்கு எதிராகவும் கட்சிக் கொள்கைக்கு எதிராகவும் செயற்பட்டு கட்சியின் சர்வாதிகாரியாக உள்ள காமினிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை எதனையும் கொண்டு வர முயற்சிக்கவில்லை என சிறிமானி அத்துலத்முதலியின் அணியினர் பிரேமச்சந்திர அணியினர் மீது கடும் கோபம் கொண்டுள்ளனர்.

மேலும் பிரேமச்சந்திர முதலமைச்சர் பதவியிலிருந்து விலக்கப்பட வேண்டும் என்றும் கட்சியின் செயலாளர் பதவி, கட்சி உறுப்பினர் பதவி என்பவற்றிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும் எனவும் கட்சிக்குள் பலமான கோரிக்கைகள் விடப்பட்டுள்ளன.

பிரேமச்சந்திர ஐக்கியதேசியக் கட்சியுடன் இரகசியப் பேச்சுக்களை நடாத்திவந்தமையை முறியடிக்கும் நோக்குடன் காமினி குழுவினர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவதில் தீவிரம் காட்டினர்.

காமினி குழுவினரும் பிரேமச்சந்திர குழுவினரும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவதற்குப் போட்டியிடும்போது சிறிமானி அத்துலத்முதலி குழுவினர் பொது மக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்து கொள்ள தீவிர ஆர்வம் காட்டியுள்ளார். இதற்காக சிறிமானி சந்திரிகா பல மணிநேரச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

பொதுத் தேர்தலில் தனக்கும் தனது ஆதரவாளருக்கும் வழங்கவேண்டிய இட ஒதுக்கீடு தொடர்பாகவும் வழங்கப்படவேண்டிய அமைச்சர் பதவிகள் தொடர்பாகவுமே தற்போது ஜனாதிபதியுடன் ஆராய்ந்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை கடந்த மாகாணசபைத் தேர்தலில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் கொள்கை பரப்பாளரும் பிரசாரத்திற்கு தலைமை தாங்கியவரும் காமினி திசநாயக்காவின் மைத்துனருமான கலாநிதி விக்கிரம வீர சூரியா தற்போது ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கவின் செல்லப்பிள்ளையாகி ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரல்லாத போதும் அதிகாரம் படைத்தவராகவும் செயற்பட்டுவருகிறார். இவருக்கு விரைவில் பாராளுமன்ற உறுப்பினர் பதவியும் அமைச்சர் பதவியும் வழங்கப்படலாம் என கூறப்படுகிறது.

இதேவேளை இ.தொ.கா வில் தற்போது ஏற்பட்டுள்ள பிளவானது அவரது மந்திரி சபைச் சகாக்களினாலேயே அவர்களின் சதியினாலேயே ஏற்பட்டிருக்க வேண்டும்என சந்தேகிக்கப்படுகிறது.

மத்திய மாகாணத்தில் சிங்களவர் பெரும் பான்மையாக உள்ள சில பகுதிகளில் ''தேயிலைக் கொழுந்து அரசியலைக் கிள்ளி எறிவோம்'' ''சிங்கள மக்களின் ஒற்றுமையே இதற்குத் தேவை'' என சிங்களத்திலான சுவரொட்டிகள் காணப்படுகின்றன. இதனை ஒட்டியவர்கள் யார்! என்ற விபரம் தெரியவராவிட்டாலும் கூட இச் சுவரொட்டிகளைக் கிழித்தெறிவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மத்திய மாகாண சபையில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானத்தை ஆதரிக்குமாறு மாகாண இ.தொ.கா உறுப்பினர்கள் கோரப்பட்ட போது 8 உறுப்பினர்கள் ஐ.தே.க.வினால் வாங்கப்பட்டமையால் இ.தொ.கா.வில் ஏற்பட்டபிளவு இன்று நீதிமன்றவாயில் வரை சென்றுள்ளது.

## நிமலராஜன்

இ.தொ.கா.வில் ஏற்பட்ட பிளவைத் தொடர்ந்து காமினி மீண்டும் ஐக்கியதேசியக் கட்சியில் இணைந்து கொள்ள தீவிர முயற்சி எடுத்து வருகிறார். அவரை இணைத்துக் கொள்வதற்கு ஐ தே க வும் இணங்கியிருப்பதாக தெரியவருகிறது.

இதேவேளை அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பை மீறினார் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் செய்து

களை பிளவுபடுத்தும் முயற்சியில் டி பி, விஜேதுங்க கணிசமான முன்னேற்றத்தைக் கண்டுள்ளார். எனினும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் அநுராவின் வெளியேற்றமும் தொண்டா - செல்லச்சாமி முரண்பாடும் ஜனநாயக ஐக்கிய முன்னணியில் ஏற்பட்ட பிளவுகளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு பெருமளவில் பயன்படுமா? என்பதே தற்போதுள்ள கேள்வி.

## றொறன்றோ

லைக் குழந்தைகள் இங்கும் கூட பயந்து பயந்து வீதியில் இறங்கும் நிலைமைதான் ஏற்படுமா? வெளியே சென்ற தமது கணவரும், பிள்ளைகளும் வீடு வரத் தாமதமானால் தாய்மார் வாசலில் ஏக்கத்துடன் காத்து நிற்கும் காட்சி இங்கும் உருவாகுமா? இவைகளைக் கற்பனை பண்ணிப் பார்க்கக் கூட மனதினால் முடியவில்லை.

எவராலும், எதனையும் திட்டமிட்டுக் கூற முடியவில்லை. கூறவும் முடியாது- ஒரே மாதத்தில் மூன்று

தாக்குதல்கள்-ஒருவர் மரணம் இருவர் காயம்-அரசாங்கங்களுக்கும் பொலிசாருக்கும் இது ஒரு புள்ளிவிபரமாக அமையும்- அரச நிறுவனங்களுக்குஅறிக்கைகளுக்கு உசாத்துணையாகப் பயன்படும்- முடிந்தால் ஏதாவது சங்கங்களுக்கு அரசாங்க நிதியுதவி பெறவும் பயன்படலாம்-

ஆனால் நடைமுறையில் உடனடியாகத் தேவைப்படும் பாதுகாப்பு எங்கிருந்து கிடைக்கப் போகின்றது? இதுவே சமூகத்தின் முன்னாலுள்ள முக்கியமான கேள்வி-

- நன்றி தமிழர் தகவல்

# பொய்க்கால்

## - ஒரு ரசிகனின் பார்வையில்

யாழ்ப்பாண சமுதாயத்தின் தோற்றப்பாட்டை வெளிக்காட்ட முயலும் ''பொய்க்கால்'' அரியதொரு படைப்பாகும். அந்த நல்ல நாடகத்தை பார்த்ததிருப்தியோடு எழுதப்படும் 'ஒரு இரசிகனின் எண்ணச் சிதறல்களே' அல்லாமல் இது ஒரு விமர்சனமல்ல; யாழ். பல்கலைக்கழக் கலைப்பீடத்தினரின் முயற்சி இந்த சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்துமா?. . . ஏற்படுத்த வேண்டும்!

யாழ்ப்பாண சமூகத்தை விபரிக்கும் கவிஞர் இ. முருகையனின் 'கவி வரிகளோடு' ஆரம்பமாகும் நாடகம் இரசிகர்கள் பலரின் உணர்வுகளோடு பல சந்தர்ப்பங்களில் இரண்டறக் கலந்தது எனலாம். இதற்கு நல்லதொரு உதாரணம் 'நளினா' பாத்திரமேற்ற நடிகையின் இறுதிக்கட்ட உணர்வலைகள். எமது கலாசார விழுமியங்கள் அன்னியன் வருகையால் அழிந்தொழிந்து போனது மட்டுமல்லாமல் நவ நாகரிக வலையில் எம்மவர்கள் வீழ்ந்து போனது உண்மை. எமது சமூகத்தின் இலக்கு-இலட்சியம் என்ன? 'பணம், பணம்' என பணத்திற்காய் மாயும் மக்களிடம் வேறெந்த இலக்கு இருக்கமுடியும். ''உன்னை நீ மையமாக்கி உயர்வு நீ பெறுவாய்'' என 'இளசு'களுக்கு போதிக்கும் எம் சமூகத்தின் 'கல்வித்தேடலும்' கூட பணத்திற்காய் என்பது தான் வேதனைக்குரியது.

''பணமில்லாட்டி பந்தயத்தில் நான் தோற்றுப் போவேன்'' என்பது நடிகனொருவனின் வாய்மொழி மட்டுமல்ல, வாழ்க்கைப்பந்தயத்தில் கால் பதிக்கும் ஒவ்வொரு இளைஞர்களினதும் ஏக்கம்! ''பணத்திற்காய் பிணமும் வாய் பிழக்கும்'' இக்காலத்தில் ''பணத்திற்காய் என்றும் மாயும் கொள்கையை வெறுக்கும்'' எம்மை இச்சமூகம் ஏற்றுக்கொள்ளுமா? அல்லது இச்சமுதாயத்தில் எதிர் நீச்சல் போட எம்மால் முடியுமா?

'பணம்' வாழ்விற்கு அவசியம் எனினும் ''ஆசைக்கோர் எல்லை வேண்டுமல்லவா?'' அதற்கான உழைப்புத்தான்- ''பொய்க்கால்'' போட்டியோடு ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்ளும் இச் சமூகத்திற்கு 'மானுடப் பண்பை' வலியுறுத்தி உணர வைக்கும் முயற்சியே இப் படைப்பு.

''முகத்திரைகளோடு'' வாழும் இன்றைய மனிதர்களின் அவலங்கள் ஏராளம்: ''பொய்சொல்லக்கூடாது பாப்பா'' என்று சொன்ன அதே வாய்கள் ''அப்பா இல்லையெண்டு சொல்லு'' என்கிறபோது... ''பத்தினித் தெய்வத்திற்கு பொங்கிப் படைத்த'' அதே கரங்கள் தமது பெண்களை வெளிநாட்டிற்கு அனுப்பத் துடிக்கும்போது. . . போட்டியும் பொறாமையும் நிறைந்த வாழ்க்கையை வாழ சமூகம் தூண்டும்போது... ஒற்றுமையாய் பலூனூதும் சிறுவர்களிடம் பணத்தாசை காட்டி பெற்றோர்கள் திருட்டையும், சண்டையையும் வளர்க்கும் போது...எமது தினசரி நிகழ்வுகள் நிதர்சனங்களாக வில்லையா?

''உண்மை''யை மறந்து வாழும் இச்சமூகத்திற்கு உண்மை சொல்லப் புறப்பட்ட ''பொய்க்கால்'' பல பிரச்சினைகளைச் சந்தித்திருக்கலாம். ஆனாலும் நகர்ப்புறங்களைக்காட்டிலும் கிராமப்புற மக்கள் நாடக உணர்வோடு ஒன்றிப்போனதாய் கருதும் இந் நாடக நெறியாளர் தம் நோக்கங்கள் வெற்றியடையும் என்ற பூரண நம்பிக்கையோடு இருக்கின்றார். ''நவீன நாடகப் பாணியை'' புரிந்து கொள்வதற்கு மக்கள் இன்னும் சிறப்பாக பழக்கப்படாததால் இந் நாடக நிகழ்வுகளில் சில மக்களுக்கு புரியாமல் போயிருக்கலாம். இருப்பினும் ''பொய்க்கால்'' வெற்றி அதன் பாதையில் எத்தனைபேர் அணிதிரள்கிறார்கள் என்பதில் தங்கியிருக்கலாம். குதிரை மேடையேறிய அரங்குகளில் ஒரு சிலராவது. . . குறைந்தபட்சம் நடிகர்களில் அரைப்பங்கினராவது நாடகம் கூறும் புதிய பாதையில்—இலட்சியப் பாதையில் ''தொண்டு செய்வதற்காய் துணிந்து இணைந்து கொள்வார்கள்'' ஆயின்- ''பொய்க்கால்'' வெற்றி பெற்றுவிடும்.

**துணவியூர் கேசவன்**


**Radio and Electronic Technician Course**

காலம் 4 மாதம்

- மிகக் குறைந்த தவணைக் கட்டணம்
- விசேட செய்முறைப் பயிற்சிகள்
- இலகு விரிவுரைகள்
- பயிற்சி முடிவில் தகுதிவாய்ந்த சான்றிதழ்

ஆரம்பம் 24-01-1994

விபரங்கட்கு:
NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, St. Peter's Lane,
JAFFNA.

(சி-8416)

**Patrician Institutes**

FOR SCHOOL SOCIETY AND THE ASSOCIATION · O.B.A · S.P.C · PRO VERITATE ET JUSTITIA

*City and Guilds London Examination 94/95*

QUANTITY SURVEYING (Part I & Part II)

Lecturer By: S. RUTHIRALINGAM
(Chartered Civil Eignneer)

Minimum Basic Qualification: G. C. E. (O/L)

Those who are Interested. Please Contact on or before 28th January '94


-REGISTRAR
Patrician Institutes,
59, St. Patrick's Road,
JAFFNA;

(A Programme initiated by "COMPASS'' Career Guidance Services)

(சி-8409)

60ஆம் நாள்
நீங்காத நினைவஞ்சலி

மலர்வு:
18 - 3 - 1984



உதிர்வு:
22 - 11 - 1993

அருமைப் புதல்வி
**தர்மலிங்கம் (பாபு) சனோஜா (சனோ)**

எங்கள் வாழ்வின் அணையாத தீபமாய் ஒளிவீசிய எங்கள் அன்புச் சனோவே, உன்னை நினைத்து அழுதழுது மனம் ஆறவில்லை உன் அருமைத் தம்பியை தவிக்கவிட்டு எங்களிடமிருந்து எங்கே சென்றாய். உன் இனிய மழலை மொழியை இனி நாம் எப்போது கேட்போமம்மா? உன் உருவம்எங்கள் மனதில் என்றும் நீங்காது நிலைத்திருக்கும்.

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகிறோம். 21-1- 1994 வெள்ளிக்கிழமை நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார் உறவினர் நண்பர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி

உன்பிரிவால் துயருறும்;
பாபு (அப்பா), மஞ்சு (அம்மா)
ஜனார்த்தனன் (தம்பி)

சிவன் கோவிலடி,
எழுதுமட்டுவாழ்.

(7278)

தமிழீழத்தின் புதிய அத்தியாயம்!
அழகிய வர்ணப் படங்களை காலாகாலத்திற்கு நிலைத்து நிற்க சிறந்த முறையில் சட்டமிட்டு அமைத்துக் கொடுக்கும்

முன்னணி நிறுவனம்

**படமாடம்**

சகல விதமான
- பூக்கண்ணாடி
- சாதாரண கண்ணாடி
- அலுமினிய இணைப்புக்கள்
- சாமிப்படங்கள்
- இனிப்பு கண்ணாடிப்பெட்டிகள்
- மீன் தொட்டிகள்

ஆகியவற்றை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளவும் மற்றும் சகலவிதமான படங்களைச் சட்டமிட்டுப் பெற்றுக் கொள்ளவும் நாட வேண்டிய,

ஒரே ஸ்தாபனம்

**படமாடம்**

அர்ச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு :- தைப்பொங்கல் திருநாளிலிருந்து எமது ஸ்தாபனத்தால் சகலவகையான கண்ணாடி வேலைப்பாடுகளும் நியாய விலையில் செய்து கொடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். (சி-8418)

**தரமானபோட்டோஸ்ரட்பிரதிகளுக்குஇளந்தென்றல்யாழ்ப்பாணம்**

(சி-8293)

சிறுகதை

# ஆச்சியின் காவல்

வவுனியா திலீபன்

செம்மண் வீதி. வீதியெங்கும் திட்டுத்திட்டாக புழுதி படிந்து காணப்பட்டது. மாலைச் சூரியன் குருதிநிறம் காட்டி மேற்கு வானில்சரிந்து கொண்டிருந்தான்.

வீதியின் இருமருங்குகளிலும் மெல்லிய சலசலப்புடன் அசைந்து கொண்டிருக்கும் பனை மரங்களும் பாலை மரங்களும் வயலோரங்களில் நீண்டு வளர்ந்து கிளைபரப்பி மண்ணிற்குஇதான இருட்டை தந்துகொண்டிருக்கும் மருத மரங்க்ளும் -

என் மனசை பூரிக்க வைத்துக் கொண்டிருந்தன.

எனக்குள் இறந்தகால எண்ணங்க்ள் மொட்டு விரிந்தன. இது என்னடா வாழ்க்கை என எண்ணத் தோன்றியது.

ஆயினும்-

தெய்வா ஆச்சியின் அன்பையும் ஆதரவையும் நினைக்கும்போது புதிய சந்தோஷம் மனமெங்கும் பரவி, நெஞ்சை சுவீகரித்தது.

படலையைத், திறந்து சைக்கிளை நுழைய விட்டுதெய்வா ஆச்சியின் வீட்டை நோக்கிய போது அது பூட்டப்பட்டுக் கிடந்தது. எனக்கு எரிச்சலாகவும் மனசுக்குள் வெறுமை சூழ்ந்ததாகவும் பட்டது.

ளடா... உங்களுக்கு அழுகையே வராதாடா?''-இவ்வாறு நேற்றிரவுகேட்டதெய்வாஆச்சியின்வார்த்தைகள் என்னைச் சிந்திக்க வைத்தன.

ஆச்சி அடிக்கடி இப்படிச் சொல்வதுண்டு

படலை திறக்கும் சப்தம்.

ஜெகன் வந்தான்... அவனைப் பின் தொர்டர்ந்து சுந்தர் வந்தான்.

மனம் மகிழ்ச்சியில் பொங்கியது.

தர்மதமாக வந்ததற்கு செல்லமாகக்கண்டிக்க வேண்டும் போலிருந்தது.

கதவில் தொங்கும் பூட்டை பார்த்துவிட்டு, அனைவரும் விறாந்தையில் - என் அருகில் அமர்ந்தனர்.

''மச்சான்... இண்டைக்கு படுக்கை வெளியிலை... இந்தப் பனிக்குளிரிலை போல தான் கிடக்கு'' என்று சுந்தர் சொன்ன போது-

தெய்வா ஆச்சியின் குரலைக் கேட்டவுடன் முதலில் அச்சம் வியாபித்தாலும், அவள் வருகையே எங்களுக்கு சந்தோஷத்தைத் தந்தது.

ஆச்சி வந்தாள்.

தான், 'மாவீரர் துயிலும் இல்லம்' சென்று வருவதாகச் சொன்னாள். தனக்கு அறிமுகமான போராளி ஒருவன் வீரச்சாவடைந்த செய்தியை தொண்டை கமறச் சொன்னாள். சில நிமிடங்களில் வழமை நிலைக்கு ஆச்சி வந்துவிட்டாள்.

தான் அன்று சந்தித்த போராளிகள் தனக்கு அறிமுகமாகி எங்கோ பல மைல் தூரத்தில் காவல் அரணில் எதிரியின் நடவடிக்கைகளை அவதானித்துக் கொண்டிருக்கும் போராளிகளின் தியாகம், களம் சென்று- புகழுடலாகக் கூட திரும்பி எடுத்து வரப்படாத மாவீரர்களின் தியாகம் அவர்களின் பழைய உரையாடல்கள் எல்லாமே தெய்வா ஆச்சியின் பேச்சில் வந்தன.

தெய்வா ஆச்சியின் கணவர் வயலில் நாளும் பழியாகக் கிடக்கின்றார். பயிர்களை அழிக்கவரும் மிருகங்களை விரட்டுவதற்கா இராக் காவல் காக்கின்றார். அவர் பகலில் இங்கு வருவார். உணவுக்குரிய பொருள்களை,

அல்லது உணவை எடுத்துக் கொண்டு வயலை நோக்கிச் சென்றுவிடுவார்.

தெய்வா ஆச்சிக்கு சில வருட காலமாக நானும் நண்பர்களும்தான் துணை. சீச்சீ...தொல்லை, துன்பம், அவஸ்தை எல்லாமுமே. ஆனால் அவளோ எமக்கு காவல்.

பொதுவாகவே ஆச்சி உறக்கம் கொள்வது மிகக்குறைவு அடிக்கடி வெற்றிலை திணித்து குதப்புவதுதான்அவளின் இராப்பொழுதுபோக்குவித்தியாசமான சத்தங்கள் கேட்டால் எங்களை எழவைத்து விடுவாள்.

தூரத்தில்வெடிச்சத்தங்கள் கேட்டாலேபோதும் 'கவனம் தம்பிமாரே...' என்பாள்.

ஆனால்-

அவள் அஞ்சியதை நான் கண்டதில்லை. விறைத்த- மனிஷி. ஆச்சியை நினைத்து நான் அதிசயப்பட்டிருக்கிறேன்.

வீட்டுச் சுவரில் மாவீரரான தன் மகனின் படத்தை 'பிறேம்' செய்து மாட்டி வைத்திருக்கிறாள். ஒரு சில மைல் தூரத்தில்- என் வீட்டிற்கு சமீபத்தில் இராணுவ முகாம் இருப்பதால்-இந்தப் படத்தை பாதுகாப்பாக தொலைவில் வைக்கலாமே என ஆலோசனை கூறியிருக்கிறேன்.

''அடப் போங்கடா..... என்ரை வீட்டிலை என்ரை வீரனிண்ட படத்தை வைக்காமல் நான் இருக்கிறதோ... சும்மா போங்கடா பயந்தவங்களே...'' என்று ஆச்சி என்னைப் பார்த்துத் திட்டியது இப்போதும் எனக்கு நினைவில் உள்ளது.

இப்போது எல்லாம் ஆச்சியின் வீடு சென்றடைந்து விட்டால், இராணுவ அச்சம் எம்மை விட்டு விலகிச் செல்வதைப் போலிருக்கும். ஆச்சியின் உறுதியும், கலகலப்பும் எம்மை தளராமல் வைத்திருக்கின்றன-

காட்டுப் பாதை வழியாக இராணுவம் அசைவு ஏதும் இல்லாமல் வரவும் கூடும்- அப்படிப் பல தடவைகள் வந்து பலரைக் கொன்றழித்து விட்டு - பரம திருப்தியில் இராணுவம் திரும்பிச் சென்றதும் உண்டு.

ஆனால் - இப்போது?

தெய்வா ஆச்சியின் பேச்சும், கரிசனையும் எமது புலன்களை வேறொரு சந்தோஷ உலகத்திற்குஏற்றுமதி செய்து விடும்.

ஆச்சி வெற்றிலையை மடித்து, பாக்குடன் உரலில் போட்டு இடித்து, வாய்க்குள் திணித்து குதப்பியபடி - சிவப்பு எச்சில் வடிய பேசினால் நாம் அவளைச் சுற்றி உட்கார்ந்து விடுவோம்.

ஆச்சிக்கு எத்துணை பலமாக சிரிக்கத் தெரியுமோ அத்துணை பலமாக அழவும் தெரியும்- அவள் காரணம் இல்லாமல் - அர்த்தம் இல்லாமல் அழும் போதெல்லாம் நாம் பெரிதாகச் சிரிக்கத் தொடங்கி விடுவோம்.

''டேய்... பொடிப்பயல்களே...என்னடா சிரிக்கிறியள்... உங்களுக்கு வாழ்க்கையிலை அழுகையே வராதா...?''

ஆச்சி கண்ணீரைத் துடைத்தபடி, ஆத்திரத்தில் அதே நேரம் மிகுந்த கவலையுடன் இப்படி சொல்லும்போதும் நாம் சிரிப்போம்.

இது அண்ணனின் இழப்பை மறக்கடிக்கும். பிரிந்து சென்ற சின்னண்ணனை நினைக்க வைக்காது.

வீட்டிலிருந்து உணவுப் பொதி கட்டிவராவிட்டால், ஆச்சியின் சமையல் அறை எமது சோதனைக்கு உட்படுத்தப்படும். பிரியமான சாப்பாடு கண்ணில் பட்டால் எமது பசி அடங்கும்.

தெய்வா ஆச்சிக்கு தெரியாமலேயே இது நடக்கும். தெரிந்தாலும் சிரிப்பாள்.

ஆச்சி வித்தியாசமானவள் தான்.

திருமணம் செய்து வெளியூரில் வசிக்கும் தன் பிள்ளைகளைப் போலவே எம்மையும் நேசித்தாள். எல்லையோரங்களில் எதிரியின் நடவடிக்கைகளை கண்காணிக்க வரும் போராளிகளை நேசித்தாள்.

இரவுநேரம் நடமாடித் திரியும் போராளிகளுக்கு

லை' கதைக்கிற மாதிரியும் கேட்குது...''

'ஆச்சி... நீயும் வாவன் ஓடுவம்.'

''நான் வரமாட்டன் என்ரை வீட்டை விட்டு நான் ஓட மாட்டன் ''

ஜெகன், சுந்தர் எல்லேர்ரும் பதறியபடி நின்றிருந்தார்கள்.

திடீர் என்று வெடிச்சத்தங்கள் சமீபத்தில் கேட்கத் தொடங்கின- ஆச்சி எங்களை ஓடும்படி வற்புறுத்தினாள்.

நாம் அனைவரும் அயலில் உள்ள காட்டிற்குள் ஓடி மறைந்தோம்-

பாலை மரங்களும், வீரை மரங்களும் அடர்த்தியாக இருந்த காட்டுப் பகுதிக்குள் தஞ்சமடைந்தோம்.

வெடிச்சத்தங்கள் பலமாய்க் கேட்டன.

சூரைப்பற்றை முட்கள் எமது தேகத்தில் ரத்த ருசி பார்த்தன. இருட்டில் ஒருவர் முகத்தை அடுத்தவரால் பார்க்க முடியவில்லை.

அந்தப் பனி வேளையிலும் தேகம் வியர்த்தது.

''ஜெகன்... சுந்தர்... கவனமாய் இருங்கோ.''

''ஓம், மச்சான் ''- இருவரும் இணைந்து சொன்னார்க்ள்.

எமது சத்தம் கேட்டு மந்திகள் தூக்கத்திலிருந்துவிழித்து கிளைக்குக்கிளை பாய்ந்தன சில பறவைக்ளும் சத்தமிட்டன.

விடிகாலைக்குஅறிகுறியாக கீழ் வானில் மெல்லிய வெளிச்சம் பரவியது.

தூரத்தில் துப்பாக்கி வேட்டுக்களின் சத்தம் ஓயவில்லை. நாய்கள் குரைத்தன

''டேய்... எழும்புங்க்டா ... மரங்களிலை ஏறிப்பார்ப்பம்...''- சுந்தர் இப்படிச் சொன்னபோது- எல்லோரும் எழுந்து அருகில் நிற்கும் உயர்ந்த பாலை மரத்தில் ஏறத் தொடங்கினோம்

மரத்தில் முதல் ஏறிய சுந்தர்

''மச்சான்... ஆமிக்காரன் தெய்வாச்சியின் வீட்டுப் பக்கம் நிற்கிற மாதிரித் தெரியுதடா...'' என்றான்.

நாம் பதுங்கியிருக்கும் காட்

வீட்டின் வெளி விறாந்தையில் சாவகாசமாக் அமர்ந்தேன். வானில் ஓரிரு நட்சத்திரங்கள் இதழ் விரிக்கத் தொடங்கின. சின்னச் சின்ன மேகங்கள் அவற்றை மறைத்தும் தாண்டியும் உலாவின.

ஆகாயத்தை அண்ணாந்து பார்க்கும் போது அழக்ாக இருந்தது. சுற்றிவரவுள்ள பற்றைக் க்ாடுகளில் இருள் கவிந்து இருந்தது;

சம்பந்தமில்லாமல்-

இராணுவத்தால் கொல்லப்பட்ட அண்ணனின் நினைவு வந்தது. இதேமாதிரி சின்னண்ணனின் உயிரும்காவு கொள்ளப்படலாம் என்று வெளிநாடு ஒன்றிற்குஅனுப்பி வைக்கப்பட்ட போது அவன் பிரியும் வேளை விக்கி விக்கி அழுதது ஞாபகத்தில் உறைத்தது.

''அது பரவர்யில்லை. கிழவிக்கு என்ன நடந்ததோ தெரியேலை அதை நினைச்சர்த்தான் கவலையாய் இருக்கு'' என்றான் ஜெகன்.

''மச்சான், உனக்கு முதன் முதல் கவலை வந்திருக்கு போர்லை. ஆரையடா ஏமாத்தப் பார்க்கிறாய்...'' என்று கிண்டலடித்தர்ன் சுந்தர்.

நான் உட்பட அனைவரும் கொல் என்று சிரித்தோம். இந்த வீட்டில் சிரிப்புத்தான் எங்கள் வாழ்க்கை. சிரிப்பதற்காகவே இங்கு வருவதாக ஒவ்வொருவரும் மௌனமாக கற்பிதம் செய்துகொள்வோம். தெய்வா ஆச்சிக்கும் இது தெரிந்திருக்க வேண்டும்.

எல்லோரும் சேர்ந்து முடிவெடுத்தோம் பூட்டை உடைப்பதாக. மறு நிமிடம் சர்த்தி

**ஆச்சியின் வீடு சென்றடைந்து விட்டால்**
**இராணுவ அச்சம் எம்மை விட்டு**
**விலகிச் செல்வதாகப்படும்.**
**ஆச்சியின் உறுதியும், கலகலப்பும்**
**எம்மை தளராமல் வைத்திருக்கின்றன.**

இவற்றையெல்லாம் பார்த்த தம்பி படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு போராடப் போனது என்னுள் உத்வேக்த்தை ஏற்படுத்தியது.

இராணுவத்தின் கொடூரங்க்ள் மலிந்து போன தேசத்தில் - பாதுகாப்பான இடத்தில்தான் நித்திரை செய்ய வேண்டும் என்று என்னை அம்மா தெய்வா ஆச்சி வீட்டிற்கு முதலில் அனுப்பிய போது நான் மறுத்ததும் அம்மா அடம்பிடித்து அனுப்பியதும்-

முதலில் மனம் ஒப்பாமல் இருந்த வீடு தெய்வா ஆச்சியின் கலக்லப்பால்- ஈர்த்ததும் நினைவுக்கு வந்தது.

இவற்றையெல்லாவற்றையும் விட

''எந்த நேரமும் சிரிப்பும் கும்மாளமுமாக நிற்கிறிய

யமாகிவிட்டது. எமக்கென ஒதுக்கப்பட்ட அறையில் வீழ்ந்தோம், கர்லடி ஓசை கேட்டது,

''பூட்டை உடைச்சுத் தானே உள்ளுக்குள்ள போனனீங்கள், எல்லோரும் வெளியிலை வாங்கடா...''- ஆச்சியின் அதட்டல்.

திடீர் என்று திடுக்கிட்ட நாம், மறு நிமிடம் சிரிப்பை அடக்க முயற்சி செய்தோம்.

''ஆச்சி... உன்னைத்தேடி நாங்கள் பட்டபாடு...எங்கை ஆச்சி போயிருந்தியள்?'' என்று ஜெகன் ஆச்சியை சமாளிக்க முயன்றான்.

''டேய்... கதைவுடாதைங்கோடா...'' என்று சத்தமாகச் சொன்ன ஆச்சி, கிணற்றடிப் பக்கமாக குப்பி விளக்கைக் கொண்டு சென்றாள்.

உணவோ-தேநீரோ எடுத்துச் செல்வாள்.

'அவங்கள் என்ரை பிள்ளைகள்... அவங்கள் இருக்காவிட்டால் நாங்கள் இஞ்சை இருக்க்முடியாது.' - இப்படிக் கூறி போராளிகள் பற்றிப் பெருமைப்படுவாள்.

ஃ ஃ

அன்றைய இரவு...

''டேய்... ஒடுங்கடா... ஆமிக்காரன் வாறான் போல கிடக்குது...''

நித்திரையில் கிடந்த நாம் அனைவரும் திடுக்கிட்டு எழுந்தோம். மனசு படபடத்தது. எல்லோரும் நடுங்கினோம்.

நான் ஆச்சியின் கையைப் பிடித்து,

''எப்படி ஆச்சி அவங்கள் வர்றாங்கள் எண்டு உனக்கு தெரியும்?''என்றுகேட்டேன்.

''டேய்... நாய்கள் குலைக்குது... சாதுவாய் சிங்களத்தி

டுப் பகுதியிலிருந்து அரை மைல் தொலைவில் உள்ள ஆச்சியின் வீட்டுப் பக்கம் நோட்டமிட்டோம்.

தூரத்தில் உள்ளவீடுகளை, மரங்களை அடையாளம்காணக்கூடிய அளவுக்கு வெளிச்சம் பரவியிருந்தது.

தெய்வாச்சியின் வீட்டுப் பக்கம் இராணுவ உடைதரித்தவர்க்ளின் நடமாட்டம் அதிகம் க்ாணப்பட்டதை நான் அவதானித்தேன். ஆச்சியைப் பற்றிய நினைவுகள் நெஞ்சில் மையம் கொண்டன.

''டேய்... இஞ்சை பாருங்கடா ... எங்களுக்குப் பக்கத்திலையும் ஒருவன்நிற்கிற மாதிரி தெரியுதடா!' என்று சுந்தர் காட்டிய திசையை நோக்கினோம்'

அங்கே பலகாலத்திற்குமுன்னர் எரிந்து போன கம்பிக்

(2ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழ தேசவழமைச் சட்டம்

ச. தியாகராசா

ஏகாதிபத்திய நாடுகள் பிறநாடுகளை ஆக்கிரமித்து தமது ஆட்சியின் கீழ் கொண்டு வந்து அவர்களை ஆளுவது அந்நாடுகளிலுள்ள உயர் குழாத்தினரைக் கொண்டுதான். புரட்சியையும், எழுச்சியையும் தடை செய்யும் நோக்கத்துடன் ஆக்கிரமிப்பாளர்கள் இவ்வுயர் குழாத்தினர் மூலம் அந்நாடுகளின் பழக்கவழக்க அடிப்படையிலான சட்டங்களை வைத்து நீதிபரிபாலனம்செய்வார்கள். உள்ளூர் உயர் குழாத்தினரும் தாங்கள் முன்னர் அனுபவித்து வந்த உரிமைகளும், சலுகைகளும் தொடர்ந்தும் இருக்கும்என்ற காரணத்தினால் உற்சாகத்துடன் அவ்விதம் செய்வதற்கு தமது ஒத்துழைப்பை வழங்குவார்கள். அந்நாட்டு சுதேசிகள் கூட தாம் முன்னரே பழக்கப்பட்ட பழக்கவழக்க சட்டதிட்டத்தின் கீழ் ஆளப்படுவதை ஆட்சேபிப்பதில்லை. இவ்விதம் தான் இலங்கையிலும் நடந்தது.

இலங்கையின் தற்போதைய வடக்கு கிழக்கு பகுதிகளை உள்ளடக்கிய தமிழர்களின் தேசிய அரசின் கீழ் பல பிராந்திய பழக்கவழக்கங்களும் சட்டங்களும் இருந்தன. அவற்றில் ஒன்றுதான் தேசவழமைச்சட்டம்.

தேசவழமை என்பது இரு சொற்களின் கூட்டு. தேசம் என்பது நாட்டைக் குறிக்கும். வழமை என்பது பழக்க வழக்கங்களைக் குறிக்கும். இந்த பழக்கவழக்கங்களின் அடிப்படையிலான தேசவழமைச் சட்டம் வட தமிழீழத்தில் வாழும் தமிழர்களைக் கட்டுப்படுத்துவதாகும். அப்பிரதேசத்திலுள்ள நிலங்களுக்கும் பொருத்தமுடையதாகும்.

## வரலாறு

1704இல் ஒல்லாந்த தேசாதிபதியான சைமன்ஸ் என்பவர் கிளாஸ் ஐசைக்ஸ் என்பவரிடம் யாழ்ப்பாணத்தில் வாழும் தமிழர்களின் பழக்க வழக்கங்கள் பற்றி விசாரித்து அப்போதுஇருந்த நிலையைத் கோவைப்படுத்துமாறு உத்தரவு இட்டார். 1707 இல் இந்த ஐசைக்ஸ் என்பவர் டச்சு மொழியில்தனது அறிக்கையை வண்டர்டுயின் என்ற தளபதிக்கு சமர்ப்பித்தார். இத்தளபதி இவ்வறிக்கையை தமிழில் மொழிபெயர்ப்பித்தார். இந்தமொழிபெயர்ப்பை அவர் பின்னர் 12 "விவேகமுள்ள" முதலியார்களிடம் படித்து தேவையாயின் திருத்தும்படி கொடுத்தார். இம் முதலியார்கள் மொழி பெயர்ப்பு சரியெனக் கூறியதன் பெயரில் 1708இல்இம்மொழி பெயர்ப்பு தேசாதிபதியால் சட்டமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இலங்கையிலுள்ள ஒல்லாந்தரின் பிரதேசங்கள் ஆங்கிலேயருக்கு கைமாறிய போது 1806ஆம் ஆண்டின் 18-ம் இலக்க ஒழுங்கு விதிகளின் மூலம் தேசவழமை என்று கூறப்படும் பழக்க வழக்கங்கள் முற்று முழுதாக நடைமுறையில் உளளதென்றும், யாழ்ப்பாண மாகாணத்தில் வதியும் மலபார் வாசிகளுக்கு இடையேயான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் மலபார் ஒருவர் எதிராளியாக இருக்கும் வழக்குகளில் தீர்ப்பு வழங்குவதற்கும் தேசவழமைச் சட்டம் உரித்துடையதென பிரகடனப்படுத்தப்பட்டது.

## புதிய சட்டம்

பழக்க வழக்கங்களில் பல மாற்றங்கள் ஏற்பட்ட பின்னரும் கூட தேசவழமைச் சட்டம் மாற்றமடையாமல் இருந்தது. உலகம் மாறிவிட்டது. யாழ்ப்பாணமும் மாறிவிட்டது. முன்னைய பழக்க வழக்கங்கள் இன்றைய நடைமுறையில் இல்லை. தத்தெடுப்பது, சிறைக்குடிகளை ஈடுவைப்பது போன்ற பழைய பழக்க வழக்கங்கள் மறைந்துவிட்டன. தேசவழமையின் ஒரு அங்கமான அடிமை குடிமை முறையும் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. தேசவழமையின் பெரும் அளவிலான பகுதிகள் செல்லாதவையாகவும், வலுவிழந்தவையாகவும் ஆகிவிட்டன. இவ்விதம் இருந்தும் கூட பல விடயங்கள் இன்னும் மாற்றப்பட வேண்டியவையாக உள்ளன. சமூக - அரசியல், பொருளாதார பண்பாட்டு மாற்றங்களும், முன்னேற்றங்களும் தேசவழமைச் சட்டத்தின் பலவற்றை இல்லாமல் செய்வதற்கும், திருத்தம் செய்வதற்கும் அல்லது சேர்த்துக் கொள்வதற்குமான அவசியத்தை ஏற்படுத்தியுள்ளன. இதைத்தான் தமிழீழ விடுதலைப் புலிகளின் நீதி நிர்வாகத் துறையினர் இப்போது செய்ய எத்தனித்து தமிழீழ தேசவழமைச் சட்டம் என்ற ஒரு சட்டத்தை உருவாக்கியுள்ளார்கள். இச்சட்டம் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனின் ஆணையுடன் 1993ஆம் ஆண்டின் 3-ம் இலக்கச் சட்டம் என்று பிரகடனப்படுத்தப்பட்டு 01-12-93இல் இருந்து அமுலுக்கு வந்துள்ளது.

இப்புதிய தமிழீழ தேசவழமைச் சட்டத்தில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சில அம்சங்களை ஆராய்வது நல்லது. திரு. பிரபாகரனால் உருவாக்கப்பட்டஇச்சட்டம் புரட்சிகரமானதாகவும், வடக்கிலுள்ள குடும்பப் பிரச்சினைகள் பலவற்றைத் தீர்த்து வைக்கக் கூடியதாகவும் உள்ளது.

## முதுசம்

இளம்பெண்கள் நோய்வாய்ப்பட்ட ஆண்களுக்கு விவாகம் செய்து வைக்கப்படுவதை நாம் காண்கிறோம். அதற்கு காரணம் அவ்வாண்கள் பணம் படைத்த, ஆதனங்களுக்கு உரித்தாளராக இருப்பதினாலேயே தான். சீதனம் கொடுப்பதற்கு வசதியற்ற ஒரு 18 வயது பெண்பிள்ளை ஒரு உடல்நலம் குறைந்த 25 வயது கொண்ட ஆணுக்கு விவாகம் செய்து வைக்கப்படுகிறார் என்று வைத்துக் கொள்வோம், யாழ்ப்பாண சமூகத்திலுள்ள பெண்களுக்கு இவ்விடயத்தில் தன்னிச்சையாக நடப்பதற்கு முடியாது. பெற்றோர் தமதுவறுமையின் காரணமாக இத்திருமணத்திற்குச்சம்மதிக்கிறார்கள். பெண்ணும் நல்ல கீழ்ப்படிவான பிள்ளை என்ற முறையில் இத் திருமணத்திற்குச்சம்மதித்தே ஆகவேண்டும். அதன் பின் தம்பதிகள் ஏதோ விதத்தில் ஒன்றாக வாழ்கிறார்கள் என்றும் வைத்துக் கொள்வோம். ஏற்கனவே உடல் நலம் குறைவாக இருந்த கணவன் 7 வருட திருமணவாழ்வின் பின் இறக்கிறார் என்றும் வைத்துக் கொள்வோம். அவர் இறந்து 31-ம் நாள் அந்தியேட்டி முடிவடைந்தவுடன் இப்போது 25 வயதாகிய நல்ல உடல் நிலையிலுள்ள அப்பெண் கணவனின் வீட்டிலிருந்து அவரது பெற்றோ

## சீதனம்

இப்போது இதன் மறுபக்கத்தைத் திருப்பிப் பார்ப்போம். ஒரு உடல் வலுவுள்ள ஆண், அதாவது ஒரு குடும்பத்தை வைத்து பராமரிக்கக்கூடிய ஆண், வீடுவளவைச் சீதனமாகக் கொண்டு வரும் ஒரு பெண்ணைத் திருமணம் செய்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அவர் இயல்பான முறையில் வாழ்க்கையை நடத்தி தனது மனைவியையும் நன்றாகப் பராமரித்து அவர்கள் வசிக்கும் மனைவியின் வீட்டிற்கு தேவையான திருத்தங்களைச் செய்தும், அவ்வீடுள்ள காணிக்கும் திருத்தங்களைச் செய்தும் வருகிறார் என்றும் வைத்துக் கொள்வோம். துரதிர்ஷ்டவசமாக இத்தம்பதிகளுக்கு பிள்ளைகள்இல்லை. 30வருடகால இவ்வாழ்க்கையின் பின் மனைவி இறக்கிறாள். இச்சந்தர்ப்பத்தில் என்ன நடக்கிறது? மனைவியின் பெற்றோர் உயிருடன் இருந்தால் அல்லது மனைவியின் வாரிசுகள் கடமையுணர்வுள்ள அக்கணவனை அவ்வீட்டிலிருந்து துரத்துவார்கள். காரணம் சீதன ஆதனத்தின் மீது கணவனுக்கு உருத்து இல்லா

ரால் அல்லது சகோதர சகோதரியால் விரட்டப்படுகிறாள். காரணம் ஆணின் முதுசச் சொத்து அவர் பிள்ளைகள் இல்லாது இறந்தால் அவரது பெற்றோருக்கே சென்றடையும். இவ் அவலப்பெண்ணின் பெற்றோர் இக்காலகட்டத்தில் இறந்திருக்கலாம், அல்லது மேலும் கடன் பளுக்களால் அவளைப் பராமரிக்கக் கூடிய நிலையில் இல்லாது இருப்பர். அதனால் அப் பெண் நெருக்கடிக்கு உள்ளாகலாம்.

மையேயாகும். வீடும் வளவும் தேசவழமைச் சட்டத்தின் கீழ் மனைவியின் வாரிசுகளுக்குசென்றடைகின்றது. மனைவியின் சீதன ஆதனத்திற்கு கணவன் ஒருபோதும் வாரிசாக முடியாது. இந்த நியாயமற்ற பிழையான நிலைப்பாடு தமிழீழ தேசவழமைச் சட்டக் கோவையின் புதிய 13-ம் சரத்தினால் நிவர்த்தி செய்யப்படுகிறது. திருமணம் வலுவிலுள்ள போது கணவனோ மனைவியோ பிள்ளைகள் இல்லாமல் இறந்தால் எஞ்சியிருப்பவர்கள் இரண்டாந்தரம் வேறு விவாகம் செய்யாவிடின் இறந்த தாரத்தின் ஆதனங்களில் அரைப்பங்கிற்கு உரித்துடையவர் ஆவார். எமது சமூகத்தில் நிலவும் இச்சீர்கேட்டிற்கு இது காலத்திற்கு ஏற்ப செய்யப்பட்ட ஒரு பரிகாரமாகும்.

## பெண் சுதந்திரம்

தமிழ் சமூகத்தின் சமூக கட்டுக்கோப்பில் ஏற்பட்டுள்ள இன்னொரு மாற்றத்திற்குத்தேவையான விடயம் ஒன்றும்தமிழீழ தேசவழமைச் சட்டத்தின் மூலம் தரப்பட்டுள்ளது. சட்டத்தின் 19 வது சரத்தின்படி திருமணம் செய்த சகல பெண்களும் ஆண்களைப்போல சுதந்திரமாகக் கணிக்கப்பட்டு தங்களது சொந்த ஆதனங்களையும் கணவனுடன் சேர்ந்து தேடிய தேட்டச் சொத்தின் 1/2 பங்கையும் கணவனின் சம்மதமின்றி விற்கவோ, ஈடுவைக்கவோ, நன்கொடை கொடுக்கவோ முடியும். முன்னர் திருமணமானவுடனேயே சீதனமாகக் கொடுக்கப்பட்ட ஆதனத்தை கணவனின் எழுத்து மூலமான சம்மதத்துடனும், அனுமதியுடனும் தான் மனைவி விற்கவோ, ஈடுவைக்கவோ, நன்கொடை செய்யவோ முடியும். இது ஒரு பெண்ணடிமையின் சின்னம். திருமணம் செய்த ஆண்கள் வெளிநாடுகள் செல்கிறார்கள். அங்கு அவர்கள் புதிய மனைவியையோ அல்லதுஒரு சிநேகிதியையோசேர்த்துக்கொண்டு சொந்தநாடு திரும்பாமலும் மனைவி பிள்ளைகளின் சீவியத்திற்குப் பணம் அனுப்பாமலும் இருக்கிறார்கள். அப்படியான சந்தர்ப்பங்களில் தனக்குச் சொந்தமான ஆதனத்தை மனைவி வாழ்க்கையை நடத்துவதற்கு செலவுக்குத்தேவையான பணத்தைப்பெறுவதற்கு விற்கவோ, ஈடுவைக்கவோ முடியாத நிலையில் இருக்கிறார். புதிய சட்டம் இக்குறைபாட்டை நீக்குகிறது. இந்தச் சரத்தின் விளைவாக அதாவது 21 ஆவது சரத்துப்படி மனைவியானவள் தனது கணவனை சேர்க்காமலே நீதிமன்றுகளில் வழக்குத் தாக்கல் செய்யலாம். அதேபோல் கணவனைச் சேர்க்காமலே மனைவிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படலாம்.

இச்சட்டக் கோவையின் கடைசிச் சரத்து இச்சட்டக் கோவையிலுள்ள சரத்துக்களுக்கு மாறில்லாத, முரணில்லாத பழைய தேசவளச் சட்டங்களிலுள்ள விடயங்கள் சமூக நீதியைப் பாதிக்காத வகையில் இருப்பின் அவற்றின் நன்மை தீமைகளை ஆராய்ந்து நீதியாளர்கள் அவற்றின் அடிப்படையில் தீர்ப்புகள் வழங்கலாம்.

தமிழ் சமுதாயம் வளர்ச்சியடைந்து பல முன்னேற்றமான மாற்றங்கள் ஏற்பட்டு வரும் இக்காலகட்டத்தில் தேசவழமையில் தற்போதுள்ள ஆதனங்களைப் பெறும் முன்னுரிமை, தண்ணீர்ப் பங்கு, கிணற்றுப் பங்கு போன்ற உரிமைகள் பற்றிய விடயங்கள் கவனத்துக்கு எடுத்து அவை பற்றிய புதிய ஏற்பாடுகள் செய்ய வேண்டிய நிலையும் ஏற்படலாம். இது எவ்வாறிருந்தாலும் இப் புதிய தேசவழமைச் சட்டம் காலத்துக்கு உகந்ததாகவும் மாறிவரும் தமிழ் சமுதாயத்தின் தேவைகளுக்கு ஏற்ற வகையிலும் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது உண்மை.

# நுண்ணலை அடுப்புகள்

உலகில் மனிதன் தோன்றியவுடன் தற்போதைய மனிதனைப் போல் எண்ணவும், எழுதவும், செயல்களைச் செய்யவும், அவன் அறிவும் ஆற்றலும் கொண்டு இருக்கவில்லை. காடுகளிலும், மலைக் குகைகளிலும், உடுத்தும் உடையின்றி, பேசும் மொழியின்றி இயற்கையில் கிடைத்த காய்கறிகளையும், பழங்களையும் உண்டு வாழ்ந்தான். பின்பு வீசும் காற்றின் வேகத்தில் காட்டு மூங்கில்கள் உராய்ததால் தீப்பிடித்ததைக் கண்டான். அத்தீயில் சிக்கிக்கொண்ட விலங்கு, பறவை ஆகியவைகளின் இறைச்சி மென்மையாகவும் சுவையாகவும் இருக்கக் கண்டான்.

அந்த நிகழ்ச்சியைக் கொண்டு பிற்கால மனிதன், இரண்டு கற்களைத் தேய்த்து அதில் நெருப்பு உண்டாக்க அறிந்துகொண்டான். பின்னர் தான் உண்டு வந்த உணவுகளை வாட்டி உண்ண ஆரம்பித்தான்.

இவ்வாறு படிப்படியாக பல வகையில் உணவைச் சமைப்பதற்கு பல்வேறு அடுப்புகளைப் பயன்படுத்தி வந்த மனிதனால் அண்மையில் புது வகை அடுப்பு கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இது நுண்அலை அடுப்பு (MICRO WAVE OVEN) எனப்படுகிறது.

இப்பொழுது சமைக்கும் முறையில் வெப்பசக்தி அதிகமாக வீணாகிறது. முதலில் சமையல் செய்யப் பயன்படும் அடுப்பும் சமையல் அறையும் வெப்பம் அடைகின்றன. ஒரு பொருளை வெப்பப்படுத்தி வேகவைக்கவோ அல்லது அதனை வறுக்கவோ சமைக்கும் பாத்திரத்தைச் சூடாக்க வேண்டியுள்ளது. அந்தப்பாத்திரம் உணவுப் பொருள்களுக்கு வெப்பமேற்றுகின்றது.

ஆனால் நுண்ணலை அடுப்பில் இப்படிப்பட்ட வெப்பச் சேதம் ஏற்படுவதில்லை. எல்லாவகைஅடுப்புகளைப் போல நுண்ணலை அடுப்புக்கள்நேரிடையாக வெப்பத்தைச் சமைக்கும் உணவில்செலுத்துவதில்லை. அதற்கு மாறாக சமைக்கப்படும் பொருள் மட்டும் தானே வெப்பம் அடைந்து வேகுகின்றன. அது எப்படி!

நம்முடைய இரண்டு உள்ளங்கைகளையும் சேர்த்து வேகமாகத் தேய்த்தால் வெப்பமுண்டாகின்றது. அந்த முறையில் தான் நுண்ணலைகள் உணவுப் பொருள்களில் வேலை செய்கின்றன.

நுண் அலைகள் உணவுப் பொருளினுள்நுழையும்போது திரவமாக அல்லது ஈரமாக இருக்கும் உணவுப்பொருளின் மூலக்கூறுகள் அதிர்வடைகின்றன. இந்த அதிர்வு ஒரு செக்கனுக்கு 24.500 இலட்சம் தடவை நிகழ்கிறது அதனால் உணவுப் பொருளில் வெப்பம் உண்டாகும்படி உராய்வை ஏற்படுத்துகிறது

தொலைக்காட்சி, வானொலி நிலையங்களிலிருந்து அனுப்பப்படும் அலைகளைப் போன்றவையே நுண்ணலைகள். உணவுப் பொருள்கள் அவைகளை உறிஞ்சிய உடனேயே வெப்பம் அடைகின்றன.

நுண்ணலை அடுப்பில் காகிதம், பிளாஸ்ரிக் கண்ணாடி, பீங்கான், மண் ஆகியவைகளால் செய்த பாத்திரங்களில் சமையல் செய்யலாம். அவற்றில் ஈரமுள்ள மூலக்கூறுகள் இன்மையால் அவை நுண்ணலைகளை உறிஞ்சி வெப்பமடைவதில்லை. அதனால் அவை எரியமாட்டா.

ஒரு காகிதத்துண்டின்மேல் ஓர் இறைச்சித் துண்டத்தை வைத்து அடுப்பில் இட்டால் நுண்ணலைகள் அதனை ஒரே நிமிடத்தில் முறுகலாக வறுக்கிறது. சாதாரண அடுப்பில் வேக ஒருமணிநேரம் எடுக்கும் உணவு இவ் அடுப்பில் நான்கு நிமிடங்களில் வேகுகிறது.

எனினும் இவ் அடுப்பில் சில வகை உணவுப் பொருள்களை சமைக்கமுடியாது உதாரணமாக ரொட்டி சுடுவது, 'போண்டா', 'பஜ்ஜி' வகை சிற்றுண்டிகளை இதில் சமைக்கமுடியாது.

- நன்றி 'மஞ்சரி'

# ரொறன்ரோ பெருநகரில் இனவெறி

# வெள்ளைத் தோலரின் தாக்குதல்

கடந்த வருட மத்தியில் கனடாவில் தொடர்ச்சியாக இடம்பெற்றஅடிபிடி சண்டைகள், கத்திவெட்டுகள், மட்டைஅடிகள், துப்பாக்கிச் சூடுகள் என்பனதொடர்கின்றன. சென்ற வருடத்தில் கொலை செய்யப்பட்ட முதலாவது தமிழராக ஸ்காபரோ பகுதியில் ஒரு இளைஞரை தமிழ்க் குழுவொன்று சுட்டுக்கொன்றது. அதே சமயம் தமிழீழத்தின் இரு கிராமங்களைச் சேர்ந்தவர்கள் பல தடவைகள், பல இடங்களில் மோதிக் கொண்டனர். எப்போது எங்கே என்ன நடக்குமோ தெரியாது என்று அனைவரும் அச்சத்துடன் நடமாடும்நிலை கூட இதனால் தோன்றியது. ரொறன்ரோ பெருநகரப் பொலிசார் தமிழர் பிரதிநிதிகளையும், ஆர்வமுள்ள மற்றையோரையும் அழைத்து இது தொடர்பாக மாநாடு நடாத்தினர். இதற்கு முன்னர் இரு ஊர்களின் மூத்தவர்களும் தங்களுக்குள் சந்தித்து பிரச்சினைகளும் மோதல்களும் வளராமல் தவிர்த்துக் கொண்டனர். நிலைமை பின்னர் ஓரளவு அமைதியாகியுள்ளது.

மறுபுறத்தில் பாடசாலைகளிலும் பொதுமண்டபங்களிலும் இடம்பெறும் கூட்டங்களையும், விழாக்களையும் கூச்சலிட்டு அமர்க்களப்படுத்திக் குழப்பும் கூட்டமொன்று 'நாடோடி'கள் போன்று ஓடித்திரிகின்றது. பொது நிகழ்ச்சிகளின் அமைப்பாளர்கள் பொலிசாரின் உதவியை நாடியும் எதனையும் செய்ய முடியாத பரிதாபநிலை.

இவைகளெல்லாம் ஒரு புறத்தேயிருக்க, மறுபுறத்தில் ''கறுப்புத்தோல்-வெள்ளைத் தோல்'' தாக்குதல்களுக்குள் ஈழத்தமிழர் பலிக்கடாக்களாக்கப்பட்டு வருவது அனைவரதும் கண்களை விழிக்கச் செய்துள்ளது.

இனவெறி நோக்கமுள்ள தாக்குதல்கள்இவைகள்என்று பொலிசார் கூறுகின்றனர்- வெள்ளை நிறத் தோல்காரருக்கு கறுப்பு நிறத் தோல்காரர் மீது ஏற்பட்டுவரும் வெறுப்பே அவர்களின் தாக்குதல்களிற்குக் காரணம் என்று பொதுவாகக் கூறப்படுகின்றது. 'Skin Head'என்று கூறப்படும் தோல் தலையர் குழுவினர் இவ்விடயத்தில் உக்கிரமாக முன்னணியில் நிற்கின்றனர். இவர்கள் இனவெறிக் குழுவினர் என்பதை அனைவரும் அறிவர்.

பாரம்பரிய முன்னணி என்றும் உருவாக்கத்தின் தேவாலயம் என்றும் புதுமையான பெயர்களால் அமைப்புக்களை உருவாக்கி அவைகளின் கொடியின் கீழ் நின்று இவர்கள் தங்கள் தாக்குதல்களைத் தொடர்ந்து வருகின்றனர்.

கடந்தவருட நடுப்பகுதியில் ரொறன்ரோ பெருநகரில் இடம்பெற்ற மூன்று தாக்குதல்கள் இனவெறியர்களால் மேற்கொள்ளப்பட்டவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

கடந்த யூன் மாதம் 6ஆம் திகதி விநாசித் தம்பி சிவராஜா என்ற குடும்பஸ்தர் தாக்குதலுக்குள்ளானார். ரொறன்ரோ மேற்குப் பிரதேசத்திலுள்ள உணவகத்தில் பணிபுரிந்து கொண்டிருந்த சமயம் அவர் தாக்குதலுக்குள்ளாக நேர்ந்தது. தோல் தலையர் அமைப்பைச்சேர்ந்த ஒருவரே இவரைத் தாக்கியுள்ளார்.

திரு. சிவராஜா (41வயது) இலங்கைப் பட்டதாரி ஆசிரியர். அங்கு ஆசிரியத் தொழிலையே புரிந்தவர். அவரது மனைவியும், பிள்ளைகளும் பாடசாலையில் கல்வி கற்கின்றனர். உள்நாட்டு யுத்தம், வன்செயல் தாக்குதல்கள் காரணமாக அமைதி தேடி குடும்பத்துடன் கனடாவுக்கு வந்தவர். அரச நிதியுதவியை பூரணமாகநம்பியிருக்க விரும்பாது, உணவகமொன்றில் வாரத்தின் ஏழு நாட்களும் நள்ளிரவு வரை தொழில் புரிகின்றார். இவர் மீது ஜேசன் கூலன்ஸ் என்ற 19 வயது தோல் தலையர் ஏன் தாக்குதல் நடத்தினார். காரணம் எதுவுமே இல்லை. அதுதான் இனவெறித் தாக்குதல்என்கின்றனர்நகரப்பொலிசார். ''இது இனவெறி நோக்குடன் நடாத்தப்பட்டது'' என்று அடித்துக் கூறுகின்றார்கள் அவர்கள். இதனை அனுமதிக்க முடியாது என்றார் பொலிஸ் அதிகாரி ஜோர்ஜ் முலான் அவர்கள். தங்கள் நடவடிக்கைகளையிட்டு தாம் பெருமையடைவதாக நீதிமன்றத்தில் கூலன்ஸ் கூறியுள்ளார்.

இந்தத் தாக்குதலுக்கு அடுத்தநாள் ரொறன்ரோ நகரின் மையப் பகுதியில் நடந்த மற்றொரு தாக்குதலில் குணாளன் முத்துலிங்கம் என்ற 32 வயது இளைஞர் கொல்லப்பட்டுள்ளார். கால்ரன் பிளிக்ர் வீதிச் சந்திப்புக்கு அண்மையில் வைத்து ஜூன் 7ஆம் திகதி இரவுவேளையில் இவர் போத்தல்களாலும், கத்தியினாலும் தாக்கப்பட்டுள்ளார். ஒரு ஆணும், பெண்ணுமாக இருவர் சேர்ந்து இந்தத் தாக்குதலை நடத்தியதாக நேரில் கண்ட சாட்சி ஒருவர் கூறியுள்ளார்.

இருப்பினும் தாக்குதல் நடத்தப்பட்ட இடத்தில் சனசந்தடி நிரம்பிய அந்த இடத்தில் பல நிமிட நேரம் குணாளன் கவனிப்பாரற்றுக் கிடந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதல் கொலைக்கான சரியான காரணத்தை இதனை எவரும் கண்டுபிடிக்கவில்லையாயினும், இது ஒரு இனவெறித் தாக்குதலல்ல என்று எவராலுமே அறுதியிட்டுக் கூற முடியாதுள்ளது.'' இது ஒரு இனவெறித் தாக்குதலாக இருக்கலாம். அல்லது அவரிடம் ஏதாவது கொள்ளையடிக்கப்பட்டிருக்கலாம் என்று குணாளனின் சகோதரரான தயாளன் பத்திரிகையொன்றுக்குக் கூறியுள்ளதாகச் செய்தி வெளியாகியுள்ளது.

ரொறன்ரோ பெரு நகரின் 28-வது கொலைச் சம்பவமாகக் குணாளனின் மரணம் பொலிஸ் தகவல் திரட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் கடந்த வருடத்தில் இங்கு கொலையுண்ட இரண்டாவது தமிழராகவும் இவரது பெயர் பதியப்பட்டுள்ளது. பொலிஸார் இத் தாக்குதல் பற்றி விசாரணை நடத்துவதாகவும், சமூகத்தின் ஒத்துழைப்பு தேவை என்றும் தகவல்கள்.

நிலைமை ஒருவாறு அடங்கியிருக்கலாம்என்று எண்ணிக் கொண்டிருந்த வேளையில், இரண்டு வாரங்களுக்குப் பின்னர், மூன்றாவது தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஜூன் மாதம் 20-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு நடத்தப்பட்ட தாக்குதலில் காயங்களுக்குள்ளானவர் கணேசமூர்த்திவிக்கினேஸ்வரமூர்த்தி என்ற 26 வயது இளைஞர். ரொறன்ரோவிலுள்ள தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் படித்துச் சித்திபெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பித்துவிட்டு சிறு தொழிலொன்று புரிந்து கொண்டிருந்த வேளையில் உடைந்த 'பியர்' போத்தலொன்றினால் இவர் குத்தப்பட்டுள்ளார்.

'Refugee slashed by two men inthird attack on Tamils' என்று ரொறன்ரோ ஸ்டார் பத்திரிகை இந்தச் செய்திக்குத் தலைப்பிட்டுள்ளது. அரை அடிக்கும் மேலான கணேசமூர்த்தியின் புகைப்படத்துடன் இந்த இனவெறித் தாக்குதலுக்குப் பத்திரிகை முக்கியத்துவம் கொடுத்துள்ளது.

கிங் வீதியும் டபரின் வீதியும் சந்திக்கும் இடத்துக்கண்மையில் நள்ளிரவுக்குப் பின்னர் ஒரு மணியளவில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தம்மைக் கொல்வதற்கு இனவெறியர்கள் முயற்சி எடுத்ததாக கணேசமூர்த்தி தெரிவிக்கின்றார். அத்துடன் இது ஒரு இனவெறித் தாக்குதலென்றே தாம் கருதுவதாகவும் அவர் கூறுகின்றார். ''என்னிடமிருந்து எதனையும் அபகரிக்க அவர்கள் முயலவில்லை. அல்லது பறிப்பதற்கு எத்தனிக்கவில்லை- நான் போத்தல்களால் நெற்றியிலும், தோள் பட்டையிலும் குத்தப்படும் போது, மேலும் மூன்று அல்லது நான்கு வெள்ளை நிற இளைஞர்கள் அங்கு சுற்றி நின்று நடப்பவற்றைப் பார்த்துக் கொண்டு நின்றனர். நான் ஒருவாறு தப்பித்து ஓட்டம் பிடித்தேன்'' என்று தமக்கு நடந்தவைகளை அவர் மேலும் விபரித்துள்ளார்.

இவ்வாறான சம்பவங்களை நுணுக்கமாக ஆராயும்போது அடுத்ததாக என்ன நடைபெறுமோ என்று அச்சத்துடன் எண்ணத் தோன்றுகின்றது;

சுமார் 75,000 தமிழ்மக்கள் இங்கு வசிப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. காலை முதல் நள்ளிரவு வரை பெருந்தொகையானவர்களை வீதிகளிலும். கடைகளிலும், பஸ்களிலும், ரயில்களிலும் காணக் கூடியதாகவுள்ளது. நாடளாவிய ரீதியாக தமிழர் மிகவும் சிறிய தொகையினராக இருக்கின்ற போதிலும் ரொறன்ரோ பெரு நகரைப் பொறுத்தளவில் பார்வைக்குப் பரவலாகத் தெரியக் கூடியவர்களாகத் தமிழர்கள் வசிக்கின்றனர்.

பாலர் வகுப்புகளிலிருந்து பல்கலைக்கழகம் வரை தமிழ் மாணவர் கல்வி கற்கின்றனர். உணவகங்களில் இரவு நேர வேலையில் தமிழர்கள் அநேகமாக ஈடுபட்டுள்ளனர். நள்ளிரவுக் கால காவற்தொழிலிற் கூட பெருமளவிலான தமிழர் உள்ளனர். இதனால் அகால வேளைகளில் தமிழர்களின் பகிரங்க நடமாட்டம் தவிர்க்க முடியாததாகவுள்ளது.

வெள்ளைத் தோலர்களின் தாக்குதல் இவ்வாறே தொடருமானால் எம்மவருக்கு யாரால், எவ்வாறு பாதுகாப்பு வழங்கப்படும்? பாடசா

(4ஆம் பக்கம் பார்க்க)


***COMPUTER*** கல்வி

BASIC LANGUAGE (4 Months)

திங்கள், புதன் 8-30 – 10-30

ஆரம்பம்: 24.01.94

Fees: மாதம் 400/-

LOTUS 1-2-3 (with Macro) (2 Months)

சனி, ஞாயிறு 10.30-12.30

ஆரம்பம்: 30.01.94

திங்கள், புதன் 10.30-12.30

ஆரம்பம்: 26.01-94

Fees: மாதம் 1000.00

BUSINESS ENGLISH (3 Months)

உயர் கல்வி கற்பவர்கள், தொழில் புரிவோர், உயர் பதவி நாடுவோருக்கு உகந்தது,

சனி, ஞாயிறு 2.30-4,00

ஆரம்பம்: 30.01-94

முழுக் கட்டணம் 200.00

உறுதியான கல்வியைப் பெற

SCHOOL OF BUSINESS ADMINISTRATION

16, 3rd CROSS STREET,

JAFFNA.

(சி-8426)


## 31-ம் நாள் நினைவஞ்சலி



**அமரர் சின்னையா குமாரசாமி**

(தபால் சேவகர், கரவெட்டி)

திதி: 21-01-1994

தோற்றம்: 6-06-1946 — மறைவு: 22-12-1993

தங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்

கரவெட்டி. குடும்பத்தினர்

(7279)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



**2-ம் லெப். சின்னவின்சன்**

**(பரமசாமி ஜெயக்குமார்)**

சரசாலை தெற்கு

(21-01-1989ம் ஆண்டு ஒட்டிசுட்டானில் இந்திய இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிமோதலில்வீரச் சாவடைந்தார்.)

பிறப்பு: 25-07-1972 — வீரச்சாவு: 21-01-1989

தமிழன் துயர் கண்டு தயங்காத இதயம் கொண்டு
அமிழ்தினுமினிய மொழியின் அவலநிலை போக்க
வீரவேங்கை யணியில் உனை இணைத்து
தீரமுடன் போராடிய சின்ன வின்சன்
பார நெஞ்சுடன் உனை நினைவு கூருகின்றோம்.

-குடும்பத்தினர்

(சி-8424)

# இலங்கைக்கு மீண்டும் இந்திய இராணுவம்; சிறிலங்கா அரசின் புதிய அணுகு முறை

''வெளி விவகாரங்களை கையாளும் நீண்ட அனுபவத்தில் இன்றைய நிலைபோல் இரு நாடுகளுக்கும் - இந்தியா சிறிலங்கா - இடையில் ஆழ்ந்த புரிந்துணர்வும், நெருங்கிய நட்புணர்வும் என்றுமே இருந்ததில்லை. அரசியல் சூழ்நிலை நன்றாகவுள்ளது. இந்தியாவிற்கும், சிறிலங்காவிற்கும் இரு தரப்பு பாதைக்கு வழிவகுக்கும் முகமாக ஒரு ஸ்திரமான பொருளாதார பாலத்தைக் கட்டி எழுப்புவதன் மூலம் எமது உறவை ஸ்திரப்படுத்தி பலப்படுத்தலாம்.''

சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத்தின் இக்கூற்றானது, சிறிலங்கா - இந்தியா ஆகியவற்றின் பொருளாதார உறவின் ஒத்துழைப்பு குறித்ததாக இருப்பினும், அடிப்படையில் இந்தியா சார்புக் கொள்கை ஒன்றைத் தெளிவாக சிறிலங்கா கடைப்பிடிக்க முற்படுவதையே காட்டுவதாகவுள்ளது.

சிறிலங்கா அரசாங்கம் 1987ஆம் ஆண்டிற்கு முன்னர் கடைப்பிடித்த வெளியுறவுக் கொள்கையானது அடிப்படையில் இந்திய விரோதப் போக்குக் கொண்டதாக இருப்பினும், அதன் பின்னர் அதன் வெளியுறவுக் கொள்கையானது பெரும்பாலும் இந்தியாவைமுதன்மைப்படுத்தியதாகவே இருந்தது.

இதற்கு 1987ஆம் ஆண்டு ராஜீவ் - ஜே. ஆர். ஜெயவர்தனா கையொப்பம் இட்ட ஒப்பந்தம் வழிவகுத்தது. இருப்பினும் ஜனாதிபதி பிரேமதாசா தனது ஆரம்ப கால ஆட்சிக் காலத்தில் இந்திய விரோதப் போக்கை வெளிப்படுத்தினாலும் இறுதியில், இந்தியாவுடன் மிக நெருக்கமான உறவைக் கடைப்பிடித்தார் என்றே சொல்ல முடியும். இதற்கு ஜனாதிபதி பிரேமதாசா ஒருவருடத்தில் மூன்று தடவை இந்தியாவிற்கு விஜயம் செய்தமை சுட்டிக் காட்டப்படுவதுண்டு. ஏனெனில், இதற்கு முன்னர் எந்தவொரு சிறிலங்கா ஆட்சியாளரும் ஒரு வருடத்தில் மூன்று தடவை இந்தியாவிற்கு விஜயம் செய்ததில்லை.

இவ் உறவு நிலை அமைச்சர் ஹமீத் கூறியதுபோன்று இன்று பெரும் பலம் பெற்றுள்ளது. அதாவது, அமைச்சர் ஹமீத் இந்தியாவுடனான பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பாகக் குறிப்பிடுகையில் ''இன்றுவரை இப்பிராந்தியத்திற்கு வெளியேதான் நாம் பார்த்தோம்...ஆனால் பாக்கு நீரிணைக்கு அப்பால் பாய்ந்து செல்லக் கூடிய வாய்ப்பிருக்கையில் ஏன் இவ்வளவு தூரத்தையும் கடந்து ஐரோப்பிய சமூகத்திற்குச் செல்ல வேண்டும்?'' எனத் தெரிவித்துள்ளமையானது இந்தியாவுடனான உறவில் சிறிலங்கா காட்டும் கரிசனையையே வெளிக்காட்டுவதாகவுள்ளது

ஆனால், பொருளாதார ரீதியாக அமைக்கப்படும் இந் நெருக்கமான உறவின் அடிப்படையே சிறிலங்கா-இந்திய அரசின் வெளியுறவுக்கொள்கையின் அடித்தளமாகவும் மாறிவருகின்றது. இதன் அடிப்படையே மீண்டும் ஒருமுறை இந்திய இராணுவத்தைஇலங்கைக்குள்அழைப்பதற்கான சிந்தனையின் அடித்தளத்தைச் சிறிலங்கா அரசிற்கு கொடுப்பதற்கு முற்பட்டதெனலாம்.

கடந்தவார சிங்கள, ஆங்கில வார இதழ்கள் - அரசாங்கக் கட்டுப்பாட்டில் இல்லாதவை - மீண்டும் ஒரு தடவை இந்தியஇராணுவத்தை இலங்கைக்குள் கொண்டுவருவதற்கான முயற்சியில், சிறிலங்கா அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகவும், இவ்விடயம் டில்லியில் நடைபெறவிருந்த இந்திய - சிறிலங்கா கூட்டுக் கமிட்டிக் கூட்டத்தில் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சரால் பேசப்படவிருந்ததாகவும் தெரிவித்தன.

சிறிலங்கா அரசாங்கம் இதனை உடன் மறுத்திருப்பினும், பத்திரிகைகளில்வெளியான இத்தகவல்கள் பெரும்பாலும் ஊர்ஜிதமானவை என்றே அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர். இதற்கு அண்மைக்காலத்தில், குறிப்பாக கடந்த வருட இறுதியில் பூநகரியில் சிறிலங்கா இராணுவம் சந்தித்த தோல்வியானது முக்கிய காரணமாக இருந்ததெனவும் சுட்டிக்காட்டுகின்றனர். இதற்குஆதரவாக அண்மைக் காலத்தில் சில அரசியற் தலைவர்களும் கருத்து வெளியிட்டமையானது அரசாங்கம் இவ்வழிகுறித்து சிந்திக்க வாய்ப்பாக இருந்தது.

ஆனால், இந்தியஇராணுவ உதவியைப் பெறுதல், பயன்படுத்துதல் என்பதுபுதுமுயற்சியல்ல. இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடங்கி சுமார் ஒரு வருடம் தாண்டிய நிலையில், இராணுவ வெற்றி நிச்சயிக்கப்படாத நிலையில், இந்தியாவுடன் இணைந்து கூட்டு நடவடிக்கையில் ஈடுபடுவது பற்றி சிறிலங்கா அரசாங்கம் தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கியது. ஆயினும் இந்தியா இவ்விடயத்தில், வெளிப்படையாகபெரிதும்அக்கறை காட்டவில்லை. இருப்பினும் மறைமுகமாக சிறிலங்காவுடன் கணிசமான அளவில் ஒத்துழைத்தது.

சிறிலங்காவின் முன்னாள் கடற்படைத்தளபதி அட்மிரல்கிளான்ஸி பெர்னான்டோ காலத்தில் பாக்கு நீரிணையிலும், வங்காள விரிகுடாவிலும் கூட்டு ரோந்திற்கு சிறிலங்கா ஆர்வம் காட்டிய போது அதற்கு ஒப்புக்கொள்ள மறுத்த இந்தியா, சிறிலங்கா கடற்படையுடன் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும் ஒத்துழைக்கவும் தயார் நிலையில் இருந்தது. இதுவங்காளவிரிகுடாவில்சிறிலங்கா கடற்படைக்குப் பெரும் உறுதுணையாக இருந்தது.

இதேபோன்றே சிறிலங்கா புலனாய்வுத் துறையினருக்கும் இந்திய புலனாய்வுத் துறையினருக்கும், இரு நாட்டுப் பொலிசாருக்கும் இடையில் நெருக்கமான ஒத்துழைப்பு உருவாகியிருந்தது. இதன் அடிப்படையானது தகவல் பரிமாற்றம் என்பதற்கு அப்பால் கைது செய்யப்படுபவர்கள் மீதான நேரடி விசாரணை வரையும் சென்றது.

இதில் இந்தியா கடைப்பிடித்த தனித்துவமான அம்சமாக இருந்தது, கூட்டு நடவடிக்கைக்கு உடன்படாமையே ஆகும். இதுவே இன்று சிறிலங்கா அரசாங்கத்தை புதியதொருகோணத்தில் இந்தியாவை அணுகச்செய்துள்ளதெனலாம் இவ் அணுகுமுறையேதனித்துவமானஒரு மட்டுப்படுத்தப் பட்ட இராணுவ நடவடிக்கைமூலம்விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களைக் கைது செய்ய அனுமதிக்கும் நடவடிக்கைக்கு இந்தியப்படையை அழைக்க எண்ணியமையாகும்.

ஆனால் இது குறித்து சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்ள எத்தனித்த இராஜதந்திர அணுகுமுறையானதுமிகவும் நேர்த்தியானதாகவும் நன்கு சிந்தித்துமுடிவெடுக்கப்பட்டதாகவும் இருந்ததென்பதை தகவல்கள்வெளிக்காட்டுகின்றன. இந்தியத்தரப்புத் தேவை ஒன்றை மையப்படுத்தி தனது இராஜதந்திர நடவடிக்கைகளை சிறிலங்கா மேற்கொள்ள முற்பட்டுள்ளமையே இதில் முக்கியமானது.

தலைவர் பிரபாகரன் இந்தியாவில் ராஜிவ் காந்திகொலையுடன் தொடர்புபடுத்தப்பட்டிருப்பதினால், ராஜிவ் காந்தியின் கொலை வழக்கு நடந்து கொண்டு இருக்கும் இவ் வேளையில் இந்தியா அதில் அக்கறை காட்டக் கூடும் என சிறிலங்கா கருதுகின்றது. இது தவறான மதிப்பீடும் அல்ல. இதன் அடிப்படையில் இந்தியாவின் தேவைக்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை என்ற ரீதியில்சிறிலங்கா அதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவது என்ற ரீதியில் சிறிலங்காவின் இவ் அழைப்பு அமைந்துள்ளது எனலாம்.

ஆனால் இவ்விவகாரத்தில்-தமிழரின் இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியாவின் தலையீட்டை தவிர்ப்பதற்கும் ஏற்ற விதத்திலேயே சிறிலங்காதனது அணுகுமுறையை ஏற்படுத்த விரும்பியது. அதாவது தலைவர் பிரபாகரன் விவகாரத்துடன் இவ் விடயம் நிறுத்திக் கொள்ளப்பட வேண்டும் என்பது சிறிலங்காவின் குறிக்கோளாகும்.

அத்தோடு வடக்கிற்கு அப்பால் இந்திய இராணுவத்தை அனுமதிப்பதையும்சிறிலங்கா விரும்பவில்லை. கிழக்கில் இந்திய இராணுவத்தை அனுமதிப்பதென்பது அப்பகுதியில் புதிய நெருக்கடிகளை

**ஜெயராஜ்**

யும், சிறிலங்கா அரசின் கிழக்கு குறித்த நிலைப்பாட்டையும் சிலவேளை குழப்புவதாக அமைந்துவிடக் கூடும் என்பதே சிறிலங்காவின் இத்தீர்மானத்திற்குக் காரணமாகும்.

இதனை சர்வதேச ரீதியாகவும் உறுதிப்படுத்தவும் சிறிலங்கா அரசாங்கம் விரும்பியது. இதன்வெளிப்பாடாகவே இராணுவத்தை அனுப்ப இந்தியா சம்மதிக்கும் பட்சத்தில் இவ்விடயம் தொடர்பாக ஐ நாவுடன் பேச்சுகள் நடத்துவது தொடர்பாகவும் சிறிலங்கா ஆராய முற்பட்டதெனலாம். அதாவது இந்திய வருகையையும், வெளியேற்றத்தையும் ஐ நா. வின் மூலம் சிறிலங்கா உறுதிப்படுத்த விரும்பியது.

இதேவேளை, சிறிலங்கா இந்திய இராணுவத்திற்கு இச் சந்தர்ப்பத்தை வழங்குவதன் மூலம், தனது இருகுறிக்கோள்களை நிறைவேற்ற முடியும் என கருதியது. ஒன்று, தலைவர் பிரபாகரனை சிக்க வைப்பதன் மூலம் தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை அழித்து விட முடியும் என்ற திடமான நம்பிக்கை. இரண்டாவது, இவ்வாண்டில் நடைபெறவுள்ள தேர்தல்களில் வெற்றியீட்டி அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றுதல் ஆகும்.

சிறிலங்கா அரசு வகுத்துக்கொண்ட இந் நுணுக்கமான இராஜதந்திர அணுகு முறையானது இந்திய அரசைப் பொறுத்து சில அம்சங்கள் லாபகரமானதாக இருப்பினும் இந்தியாவின் உள்நாட்டு நிலையும், இவ் அணுகு முறையில் உள்ள பலவீனங்களும் சர்வதேசரீதியாக இன்று இடம்பெற்றுள்ள சம்பவங்களும் இந்தியாவை இம முயற்சிற்கு ஆதரவாகச் செயற்பட முடியாமற் செய்துள்ளது என்றே கூறமுடியும்

தலைவர் பிரபாகரனை சிக்க வைக்கும் முயற்சியானது இந்தியாவைப் பொறுத்து தனியாக ராஜீவ் காந்தியின் கொலையுடன்தொடர்புபட்டது அல்ல. வெளிப்படையான காரணமாக அதனை இந்தியா கூறிக்கொண்டாலும், தென்னாசியாவில் தேசிய இனங்களின் விடுதலைப்போருக்கு ஒரு முன்னுதாரணமாக விளங்கும் விடுதலைப் புலிகளின் இயக்கமும் அதன் தலைமைத்துவமும் இந்தியாவைப் பொறுத்து ஒப்புக் கொள்ள முடியாததொன்று என்பதே உண்மையாகும். ஆகையினால் சிறிலங்கா வழங்கமுன்வந்த சந்தர்ப்பம் இந்தியாவின் அடி மனதில் சில அபிலாசைகளையும் தூண்டுதல்களையும் ஏற்படுத்தக் கூடியதாயினும்அதில் உள்ள முட்டுக்கட்டைகள் பெரும் நெருக்கடிகளை பின்னர் விளைவிக்கும் என்பதை இந்தியா ஓரளவு சரியாகக் கணிப்பிட்டுள்ளது என்றே கொள்ளலாம்.

முதலில் இந்தியா இன்று தனது இராணுவத்தை வெளிநாட்டிற்கு அனுப்பும் நிலையில் இல்லை என்றே கருதப்படுகின்றது. இந்தியாவில் உள்நாட்டுப் பிரச்சினைகளில் பெருந்தொகை இராணுவம் பயன்படுத்துவது குறித்து ஏற்கனவே இராணுவத்தின் உயர் பீடத்திற்கும் அரசிற்கும் இடையில் மனத்தாங்கல்கள் ஏற்பட்டுள்ளதாக இந்திய விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். இவ்வாறு உள்நாட்டுப் போர்களில் இராணுவம் பயன்படுத்தப்படுவதினால் இராணுவம் கட்டுக்கோப்பை இழந்து வருவதோடு பயிற்சிஅளிப்பதற்கான நேரம் போதவில்லை என்பதும், இராணுவச்சிப்பாய்கள் பெரிதும் மனச்சோர்விற்கும் மன உளைச்சலுக்கும் உள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகின்றது மேலும்இந்தியா இராணுவத்திற்கென ஒதுக்கப்படும் நிதியில் பெரும்பங்கு இவ் உள்நாட்டுப் போருக்குப் பயன்படுத்தப்படுவதிலும் அதிருப்தியுள்ளது.

இந்நிலையில் மீண்டும் வெளிநாட்டிலாயினும், ஓர் உள்நாட்டுப் போர்மாதிரியிலான கெரில்லாப்போர் முறைக்கு இந்திய இராணுவம் முகம் கொடுக்கதயாராக இருப்பதாகத் தெரியவில்லை மேலும் முன்னர் ஒருமுறை மேற்கொண்ட முயற்சியில் தோல்வியுற்ற பின்னர் மீண்டும் ஒருமுறை அதே முயற்சியில் தோல்வியுற நேரிடின் அது இந்திய இராணுவத்தின் 'இமேஜை' முற்றாகவே அழித்துவிடக் கூடியதாகும். அமெரிக்க இராணுவத்திற்கு அண்மையில் சோமாலியாவில் ஏற்பட்ட படிப்பினையானது இந்திய அரசிற்கு முன்னுதாரணமாக இருந்திருக்கலாம்.

மேலும், விடுதலைப் புலிகளின்தலைவர் பிரபாகரனை அணுகுவதென்பது,சிறிலங்கா அரசாங்கம் கோரியிருந்தது போன்ற ஒரு கொமாண்டோ பாணியிலான மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதலினால் எந்தளவிற்குச் சாத்தியமாகும் என்பதும் கேள்விக் குரியதே. ஏற்கனவே இவ்வாறானதொரு தாக்குதலை 1987 இல் இந்தியா யாழ். பல்கலைக்கழக வளாகப் பகுதியில் மேற்கொண்டுபடுதோல்வியையும், இழப்பையும் சந்தித்த அனுபவம் அதற்கு உண்டு.

இந் நிலையில், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சிக்க வைக்கும் முயற்சியானது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான - தமிழ் மக்களுக்கு எதிரான ஒரு முழு அளவினதான யுத்தமாகவே இருக்கமுடியும். இதன் வெற்றியையும் உறுதி செய்ய முடியாது. இந்நிலையில், இந்தியாவின் இராணுவ முயற்சியானது மீண்டும் ஒருமுறை சேற்றில் காலை வைக்கும் முயற்சியாகவே அமையும்.

இதற்கும் மேலாக, இலங்கைத் தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டம் தொடர்பாக தமிழகத்தில் இன்றுள்ள நிலை, மீண்டும் ஒருமுறை இந்தியா இராணுவத்தை அனுபபிய பின்னர் நீடிக்குமா? என்பது சந்தேகத்திற்குரியதே.

ஏற்கனவே இலங்கைத்தமிழர் விவகாரத்தில் இந்தியா கடைப்பிடித்த கொள்கை தொடர்பாக எதிர்ப்புக்கள் இருப்பதோடு இந்தியா தமிழருக்குத் துரோகம் இழைத்தது என கருத்தும் கணிசமான அளவில் உள்ளது. இந்நிலையில் தமிழருக்கு எதிரான முழு அளவிலான ராணுவ நடவடிக்கை ஒன்றை நடத்த இந்திய மத்திய அரசு முயல்வது சில நெருக்கடிகளை தமிழகத்தில் உருவாக்கக் கூடும்.

இதற்கும் மேலாக சிறிலங்கா அரசு கடந்த காலத்தில் நடந்து கொண்ட முறையானது இந்தியாவைச் சிந்திக்க வைக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் கடந்த காலத்தில் குறிப்பாக 1987ஆம் ஆண்டு இந்திய - சிறிலங்கா உடன்பாட்டிலும் அதன் பின்னர் நடந்த நடவடிக்கையிலும் இந்திய இராஜதந்திரத்திற்கு பெருத்த தோல்வியையும் அவமானத்தையும் ஏற்படுத்தியது என்பதே பலரதும் அபிப்பிராயமாகும்.

ஒப்பந்தம் மூலம் இந்திய இராணுவத்தை அழைத்த சிறிலங்கா அரசாங்கமே இந்திய இராணுவத்தை ஆக்கிரமிப்பு இராணுவம் எனக் கூறி கண்டனம் செய்ததோடு வெளியேறுமாறும் பகிரங்க கோரிக்கை விடுத்தது. இது இந்தியாவிற்கு சர்வ தேச ரீதியில் பெரும் அவமானத்தையும் ஏற்படுத்தியிருந்தது.

இவ் விவகாரம் சிறிலங்காவின் இராஜதந்திரப் பொறிக்குள் இந்தியா வீழ்ந்தது என்றே கொள்ளமுடியும்.

இந்நிலையில் ராணுவத்தை அனுப்புதல் என்பது இந்தியாவைப் பொறுத்து மீண்டும் ஒரு தற்கொலைக்கு ஒப்பான முயற்சி என்றே இந்தியத்தரப்பு ருதியிருக்கக் கூடும். இதன் காரணமாகவே இந்தியா சிறிலங்காவின் இம் முயற்சி தொடர்பாக தனது ஆதரவைத் தெரிவிப்பதில் தயக்கம் காட்டியுள்ளது.

இதைத் தொடர்ந்தே சிறிலங்கா அரசாங்கம் தனது முயற்சியை தற்பொழுது கைவிட்டுள்ளது அல்லது பிற்போட்டுள்ளது எனலாம் அவ்வாறு இல்லமல் முயற்சி மேற்கொள்ளவில்லை என்பது அரசின் முயற்சி தோல்வியில் முடிவடைந்துவிட்டது என்பதை மறைக்க முற்படுவது மட்டுமல்ல தேர்தலில் எதிர்க்கட்சியினர் இவ் விவகாரத்தையே எதிராகப் பயன்படுத்திவிடக் கூடும் என்ற அச்சத்தினாலேயே ஆகும்.

# தமிழ்மொழி ஆசிரியர் சேவைக்கால கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கல்வித் திணைக்கள யாழ்ப்பாணம் வலயம் இரண்டில் உள்ள பாடசாலைகளில் ஆண்டு 11க்கு தமிழ்மொழி கற்பிக்கும்ஆசிரியர்களுக்கான சேவைக்காலப்பயிற்சிக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிதொடக்கம் மாலை 4.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்குகள் சங்கானை சண்டிலிப்பாய்கோட்டங்களுக்கு சங்கானைசைவப் பிரகாச வித்தியாசாலையிலும், உடுவில் தெல்லிப்பழை கோட்டங்களுக்கு யூனியன் கல்லூரியிலும், கோப்பாய் கோட்டத்திற்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும், பருத்தித்துறை மருதங்கேணி கரவெட்டி கோட்டங்களுக்கு நெல்லியடி மத்தியமகாவித்தியாலயத்திலும் நடைபெறும்.

## பரிசளிப்பு விழா

கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 3-00 மணிக்கு கல்லூரியின் 125-வது நினைவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## பொதுச்சபைக் கூட்டம்

யாழ். வர்த்தகர் சங்க பொதுச்சபைக் கூட்டமும், நிர்வாகசபைத் தெரிவும் யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இன்று பிற்பகல் 2-00மணிக்கு நடைபெறவுள்ளது.

## 'வணிகஒளி' வெளியீடு

யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியில் இன்று பி. ப. 2-30 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் வர்த்தக மாணவர் மன்றத்தின் 'வணிகஒளி' சஞ்சிகை வெளியீடு இடம்பெறவிருக்கிறது.

# மரண அறிவித்தல்கள்

## திரு. ச. சொக்கலிங்கம்

(ஓய்வு பெற்ற அதிபர்)

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. ச. சொக்கலிங்கம் 20-01-94 இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற அற்புதத்தின் அன்புக் கணவரும், திரு. அமிர்தலிங்கம் (பிரதேச செயலாளர் வவுனியா), திருமதி பத்மாவதி இரத்தினவேல் (ஆசிரியை யா! கனகரெத்தினம் மத்திய மகாவித்தியாலயம்), திருமதி கமலாம்பிகை அண்ணாஇராசேந்திரம் (ஆசிரியை ஏழாலை மகாவித்தியாலயம்), திருமதி சரோஜினிதேவி நாகராஜா (ஆசிரியை மல்லாகம் மகாவித்தியாலயம்), திரு. சோதிலிங்கம் (பௌதிக ஆசிரியர் யாழ். இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி தேவமணி (நவநீதம்), அமிர்தலிங்கம் (இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் வவுனியா), நா; இரத்தினவேல் (ஓய்வுபெற்ற கணக்காளர் பொலிஸ் திணைக்களம் வவுனியா), அண்ணா இராசேந்திரம் (பதிவாளர் மாவட்ட நீதிமன்றம் வவுனியா), சு. நாகராசா (கணக்காளர் இலங்கை மின்சாரசபை வடமாகாணம்), திருமதி கலாதேவி சோதிலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும், பார்த்தீபன், சாம்பவி, செந்தூரன், சௌமியா, தேன்மொழி, தமிழினி, எழிலி, வர்மன், குணாகரன், யாதவன், கீதாஞ்சலி ஆகியோரின் பாசமுள்ள பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று வெள்ளிக்கிழமை (21-01-94) பிற்பகல் 1-00 மணிக்கு ஏழாலை மேற்கிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்தில் பூதவுடல் நீறாக்கப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தம்புவத்தை வைரவர் கோவில் ஒழுங்கை,
ஏழாலை மேற்கு.

தகவல்:
சொ. அமிர்தலிங்கம்
(பிரதேச செயலாளர் வவுனியா)
(மகன்)

(7281)

## திருமதி சுப்பையா தில்லைமுத்து

குப்பிளானைப் பிறப்பிடமாகவும், 25, மணல்தறைவீதி, கந்தர்மடத்தில் தற்போது வசித்தவருமான திருமதி சுப்பையா தில்லைமுத்து 20-01-94இல் காலமானார். இவர் முத்துத்தம்பி சுப்பையாவின் அன்பு மனைவியும், முத்தையா (ஓய்வுபெற்ற அதிபர் கொழும்பு), திருமதி இராசம்மா சுவாமிநாதர் (சுவிஸ்), திருமதி மனோன்மணி நடராஜா, திருமதி இரத்தினம் அப்புத்துரை (ஆசிரியை யாழ். இந்து மகளிர் கல்லூரி), திருமதி சரஸ்வதி சிற்றம்பலம் (ஓய்வுபெற்ற பிரதம தாதி, கனடா), காலஞ்சென்ற கணேசலிங்கம், திருமதி அம்பிகாவதி மகேந்திரராஜா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி கண்மணி சின்னத்துரையின் அன்புச் சகோதரியும், திருமதி மலர் தட்சிணாமூர்த்தி, திருமதி மருதமலர் வரதராஜா, இந்துமதி (3-ம் வருட விஞ்ஞான பீட மாணவி - யாழ். பல்கலைக் கழகம்), அன்பழகன் (13-வது அணி - மருத்துவபீட மாணவன் யாழ். பல்கலைக் கழகம்), இளவழகன் (A/L மாணவன் யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21-01-94) எமது கந்தர்மடம் இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேரும் ஏற்றுக்கொள்ளவும்.

25,மணல்தறை, வீதி.
கந்தர்மடம்
யாழ்ப்பாணம்.

தகவல்:
திருமதி இரத்தினம் அப்புத்துரை
(மகள்)

(7287)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

## உதை பந்தாட்டம்

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழுவினால் நடாத்தப்படும் வலயரீதியில் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான மாவட்டமட்ட உதைபந்தாட்டப் போட்டிகளில் இன்று மல்லாகம் பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் மாலை 3.00 மணிக்கு அராலி மாவத்தை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வடமராட்சி கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் மோதும்.

## சீட்டிழுப்பு

புவியியற்கழகம் நடாத்தும் அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு இன்றுபிற்பகல் 4.00மணிக்கு புவியியற்துறை விரிவுரை மண்டபம் இல. 02 இல் இடம்பெறவுள்ளது என புவியியற் கழகத்தினர் அறிவித்துள்ளனர்.

## 400 ஜெய்ப்பூர்

மறுத்ததை அடுத்து இவை அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளன இதனால் மேற்படி இந் நிறுவனங்களினதும் செயற்கைக்கால் பொருத்தும் நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன இவற்றை விட சுமார் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான செயற்கைக்கால் உற்பத்தி மூலப்பொருள்கள் கொழும்புத்துறைமுகத்தில் பல மாதகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகதெரிய வருகிறது. (நி)

## மார்ச் 31

நகைகளை மீள முடியாதவர்கள் தங்கள்சார்பில் ஒரு பிரதிநிதியை அனுப்பி நகைகளை மீட்டுக்கொடுப்பதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்து தரப்படுகின்றன. இது சம்பந்தமான விபரங்களுக்கு அண்மையில் உள்ள மக்கள்வங்கி முகாமையாளருடன் தொடர்புகொள்ளும்படியும் கேட்கப்பட்டுள்ளனர்.

## மன்னாரில்

மன்னார் வைத்தியசாலையில்நீண்டநாட்களாகஇருந்து வரும் வைத்தியர் பற்றாக்குறையைப் போக்கவே இவர்கள் வந்துள்ளனர். இவர்கள் இருவரில் ஒருவர் சத்திர சிகிச்சை நிபுணர்,

## புலிகளுக்கு

பெற்றது. பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் யாகத்தில் கலந்து கொண்டனர்.

1990ஆம் ஆண்டு இரண்டாவது ஈழப்போர் ஆரம்பித்த காலத்திலிருந்து அப்பகுதி மக்கள் இந்த யாகத்தினை வருடந்தோறும் நடத்தி வருகின்றனர்.

## மன்னார்ப்

வத்தினர் நிலைகொண்டுள்ளனர். இவ்வாறு வெளியேறியுள்ள இராணுவத்தினர் பல பயன்தரும் மரங்களைத் தறித்துக் காவல் அரண்களை அமைத்துள்ளனர். இதே வேளை இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள ரண்விலேஜ் கிராமத்தில் தங்கியிருந்த இடம் பெயர்ந்த மக்கள் பேசாலைக் கிராமத்துக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

## ஆச்சியின்

கிறாபோல கிடக்கு இருக்கிற பசிக்கு பிசாசு மாதிரி சாப்பிடவேணும்'' என்று சுந்தர் ஆர்வமாகச் சொன்னான்.

வீட்டிற்குள் நுழைந்தோம்.

ஆச்சியைக் காணவில்லை.

புகை வந்த இடத்திற்கு சென்றோம்.

ஆச்சி வெந்து கொண்டிருந்தாள்.

ஆடைகள், வேறு பொருள்கள் எல்லாம் குவித்து ஆச்சியின் சடலத்திற்கு தீ மூட்டியிருந்தது இராணும்.

தொண்டையைத் துக்கம் அடைத்தது. 'ஹோ' வென சப்தமிட்டு நாம் அழுததை எங்கள் தெய்வா ஆச்சியால் பார்க்க முடியவில்லை.

# தேர்தலைக் கண்காணிக்க வெளிநாட்டு குழு தேவை

### சிறிமாவோ கூறுகிறார்

(கொழும்பு)

தென் மாகாணசபைத்தேர்தலுக்கும் ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் என்பனவற்றிற்கும் வெளிநாட்டுக் கண்காணிப்பு குழுவினர் நியமிக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்வாண்டு நடைபெறவுள்ள இத்தேர்தல்சிறிலங்கா வரலாற்றிலே நடைபெறாத ஒழுங்கீனங்கள் ஏற்படச் சந்தர்ப்பம் இருப்பதாக சுட்டிக்காட்டி இதற்கு தேர்தல்கால கண்காணிப்பு குழுவின் மத்தியஸ்தம் தேவையென்றும் இதில் பல நாட்டவர்கள் உள்ளடங்க வேண்டும் எனவும் வேண்டுகோள்விடுத்துள்ளார்

இவ்வாறு வெளிநாட்டு கண்காணிப்புக் குழுவினர் பெற்றுக் கொள்வது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் சகல கட்சியினருடனும் கலந்துஆலோசனை செய்துஎந்த நாட்டவர்கள் இருக்கவேண்டுமென்பதைதீர்மானிக்கவேண்டும் எனவும் கோரியுள்ளார்.

முன்னர் நடைபெற்ற தேர்தல்களிலும் இவ்வாறு வெளிநாட்டு கண்காணிப்புக்குழுக்கள் இடம்பெற்றமை தெரிந்ததே.

# கல்விக் கல்லூரி அனுமதி போட்டிப் பரீட்சை

கல்விக்கல்லூரி அனுமதிக்காக விண்ணப்பித்த மாணவர்களுக்குரிய போட்டிப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது அதற்கான கட்டணத்தை செலுத்திய பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கத் தவறியவர்களது விண்ணப்பங்கள் பல நிராகரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பற்றுச்சீட்டை இணைக்கத்தவறியவர்கள் அப்பற்றுச்சீட்டுடன் யாழ். கல்வித் திணைக்களத்துடன் தொடர்புகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## நாளை பரீட்சை

சுகாதாரத் திணைக்கள நடுநிலை தொழில்நுட்ப பயிலுநர்களை ஆட்சேர்ப்பதற்கான பரீட்சை திட்டமிட்டபடி நாளை சனிக்கிழமை நடைபெறும் என யாழ். கல்வித்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் சுமார் எட்டு பரீட்சை நிலையங்களில் நடைபெறுகின்றது என மேலும் தெரிவிக்கப்பட்டது. (பா)(ச)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 19-01-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 286

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

42-3419, 26-7187, 24-5886, 28-5039, 26.7353
24-4390, 27-6024, 27-9756, 24-8714, 24-9744
24.5258, 42-1293, 26-6029, 40-1188, 27-7542
41-5015, 27-7081.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

42-1623, 24-6944, 26-8497, 24-4361, 40-2394
24-6168, 41-1996.

### 20-01-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 326

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

28-9186, 41-9876, 27-9404, 26-2786, 26-8419
24-4467, 40-9188, 24-5418, 24-3063, 41-7693
27-7952, 26-0573, 24-2545, 24-6110, 24-4664

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-5703, 42-6226, 24-1983, 43-4170, 24-9337
24-4636, 24-8429, 26-5281, 40-6979, 27-5734


## எழுதுவினைஞர் தேவை

நெல்லியடி வர்த்தகர் சங்க அலுவல்களைக்கவனிப்பதற்கும் அலுவலகத்தில் வேலை செய்வதற்கும் 25 வயதுக்கு மேற்பட்டவர் கல்வித்தகைமைகளுடனும் நற்சான்றிதழ்களுடனும் 24-1-94 திங்கட்கிழமை மாலை3மணிக்கு நெல்லியடிவர்த்தகர் சங்க காரியாலயத்தில் நேரில் சமுகம் தரவும்.

(7278)

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

யாழ்- ஸ்ரீதர் திரையில்

"COMMANDO",

(அதிபயங்கர தாக்குதல் சித்திரம்)

தினசரி மாலை 4. 00 மணி
மாலை 6. 00 மணி

சனி, ஞாயிறு காலை 10.30 பி. ப. 2.30மணி
மாலை 4. 00 மணி மாலை 6. 00 மணி

(ஜ-8427)